# தமிழ் முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

முரசு: 4
ஒலி: 5

1986
பங்குனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் நேசம்

தமிழ் நேசம் - 93

## புரட்சிகர விடுதலையா... அராஜகமா... மக்களே தீர்மானியுங்கள்.

ஆக்கிரமிப்பு அரசின் அனைத்து
அடக்குமுறைகளுக்கும் எதிராக ஈழவரின் மக்களின்
இடைவிடாத போராட்டங்களால் நிறைக்கப்பட்டு
ஈழப்போரின் புதிய அத்தியாயங்கள் புரட்சிகரப் ப
க்கங்களாகத் திருப்பப்பட்டுக் கொண்டிருந்த வேளை..
வழமை போல விடுதலைப் புலிகளின் அராஜகத்தனத்தால்
திசை திருப்பப்பட்டிருக்கிறது. சித்தாந்தங்களைச் சுவீ
கரிக்காது அவைகளிடையே அரசியல் அநாதைக
ளாகத்தான் நிற்கிறோம் என்பதை விடுதலைப் புலிகள்
தோழர் அமீனை (சிறிதரன்) கொன்று அவர் இரத்தத்
தில் எழுதிக் காட்டியுள்ளனர்.

ஆம்! ஈழப்போராட்டத்தின் இரத்தக்கறை
படிந்த அத்தியாயம் தொடர்கிறது. 'துப்பாக்கிகளை
யாவும் பொது எதிரிக்கெதிராகவே' என்ற இலக்கு மீண்
டும் ஒருமுறை மறக்கப்பட்டிருக்கிறது. விருப்புக்கள்
அனைத்தையும் நிராகரித்து விடுதலையை மட்டும் விரு
ம்பிய ஒரு வீரனின் உடல் வெட்கங்கெட்ட துப்பா
க்கிகள் துப்பிய குண்டுகளால் துளைக்கப்பட்டிருக்
கிறது. தேசத்தை நேசித்த தோழனின் இரத்தம்
மீண்டும் அவன் நேசித்த பூமியிலேயே சிந்தியுள்ளது.
கோழைத்தனமாக ஒரு வீரனைக் கொன்றது போதா
தென்று இரத்த வெறி பிடித்த கூட்டத்தின் தலைமைப்
பீடம் செய்யும் நீதியற்ற நியாயப்படுத்தல்களும்
நேர்மையற்ற பொய்ப் பிரச்சாரங்களும்.

ஈ.ழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்
மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த வன்னிப்
பிராந்தியப் பொறுப்பாளர் தோழர் ரமேஷைக் கொன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் உலகறிந்த சர்வதேச விடுதலை இயக்க மொன்றின் பாசறையில் பயிற்சி பெற்ற PLAயின் மற்று மொரு செயலணித் தோழர் அமீன் விடுதலைப்புலிக ளினால் வெறித்தனமாகக் கொல்லப்பட்டிருக்கிறார். முன் னதை தவறுதலென்று நியாயப்படுத்திய புலிகள் இப்படுகொலையை தவறுதலாய் நடந்தது என நியா யப்படுத்தியுள்ளனர். இன்னும் எத்தனை போராளிகளை புலிகள் 'தவறுதலாய்' கொல்லப் போகிறார்களோ தெரியாது.

தமிழ் முதலாளித்துவக் கூட்டணியினருக்கெதிரான எதிர்ப்புக்குரல் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்த சமயத்தில் அக்குரலை அடக்க சுந்தரம், 1983-ஆடி அவலம் கண்டு கொதித்தெழுந்த மக்கள் சக்தியை திசைதிருப்ப தேவன், கருத்தைப் பற்றிக் கொண்டு இயக்கங்களிடையே தனி நபர் அதிகாரத்துக்கு எதிராக குரல் எழுப்ப முற்பட்ட மகேஸ்வரன், ஆயுதப் போரிலே புதிய தந்திரங்களை கையாள முற்படுகையிலே விஜேன், பொது எதிரிக்கெதி ராக இயக்கங்கள் ஐக்கியப்படுகையிலே ரமேஸ், இப்போது மக்கள் விடுதலைக்கு வழிவகுக்கையிலே அமீன்.....

ஈ.ழ மக்களே சிந்தியுங்கள். இது வெறித்தனமானதோ வெறும் கோபமானதோ நிகழ்ந்த கொலை அல்ல. திட் டமிட்ட படுகொலை. புரட்சிகர சக்தி ஒன்று தலையெடுப்பதை சிறிதளவேனும் அனுமதிக்கக்கூடாது என்ற காரணத் தால் EPRLFக்கு எதிராக நிகழ்த்தியவை தொடர்ந்த படு கொலைகள், பொய்ப்பிரச்சாரம்... இவற்றின் ஓர் அம்சமே இக்கொலை. ஆயிரக்கணக்கான கொலைப்படைகளாலேயே தேடிப் பிடிக்க முடியாத சர்வதேச பாசறைகளில் பயிற்சி பெற்ற EPRLF போராளிகளை புலிகள் தேடிக் கொல்வதன் காரணம் வேறு என்ன? கொள்கைவாதிகள் போலன்றி EPRLF இன் இரு செயலணித் தோழர்களை தேடி புலிகள் துப்பாக்கிகளுடன் அலையும் காரணம் என்ன...?

ஈ.ழ மக்களே தீர்க்கமாகச் சிந்தியுங்கள். புரட்சிகர சக்திகள் ஆயுதங்களினால் அழிக்கப்படு வதை அனுமதிக்கப் போகிறீர்களா? அராஜகத்துக்கும், அநீதிகளுக்கும் எதிராக நீங்கள் கிளர்ந்தெழா விட்டால் நாளை நாட்டின் ஒவ்வொரு நிமிடமும் எமது தேச த்தைச் சுடுகாடாக்கும். எமது பாசறைகளெங்கும் புதை குழிகளே தோன்றும். இன்னுமொரு 'பொல்பொட்' ஆட் சியை நோக்கி எமது தேசத்தை நகர்த்தும். மக்களே உங்களுக்கு தேவை அராஜகத்தன்மையா அல்லது புரட்சிகர விடுதலையா என்பதை நிறுத்துத் தீர்மானியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையாளர்களை கொலை செய்யும் கைகள் விடுதலைக்கு விதை விதைக்குமா?

தோழர் அமீன் - மற்றெல்லாவற்றையும் விடத்தன்னுடைய தேசத்தை விருப்பமாக மிக விருப்பமாக நேசித்தவன். அடிமை விலங்குகளை உடைத்தெறிவதற்காக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் தன்னை இணைத்துக்கொண்டவன். துப்பாக்கி வழிபாட்டிற்கு இடங்கொடாமல் அரசியல் வேலைகட்கு முக்கியத்துவம் கொடுக்கும் முன்னணியின் கொள்கையால் ஈர்க்கப்பட்டவன். EPRLF இன் உப பிரிவுகளினூடாக மக்களிடையே படிப்படியாகப் பல அரசியல் வேலைகளில் ஈடுபட்டு இயக்கத்தோடு தன்னை இறுக்கி இறுதியாக மக்கள் விடுதலைப் படையில் இணைந்துகொண்டவன். சர்வதேச விடுதலை இயக்கப் பாசறையில் பயிற்சிபெற்ற பின்னர் களத்துமேட்டில் எதிரிகளுடன் கருவிகளுடன் போரிட்டும் மக்களுடன் கருத்துக்களுடன் பரிமாறியும் கொண்டிருந்தவன். இந்தத் தோழன் வெறித்தனமாக விடுதலைப் புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறான். வழமைபோல் புலிகளும் தெரியாமல் சுட்டோம் என நியாயப்படுத்தியுள்ளார்கள்.

சமயத்தில்
எதிரி கிடைக்கா விட்டால்
ஊரில் மனிதர்களும்,
மின்சாரக் கம்பங்களும் உண்டே.

அதுவும் கிடையாத போது
நெறி பிறழாத ஒரு தோழனை...........

துப்பாக்கி சுடாறக் கூடாது பாரும்.
நியாயப் படுத்த தலைமைப் பீடமும்,
பிரசுரம் அடிக்க வெளியீட்டுப் பிரிவும்
உள்ளன தோழரே

விடுதலைப் பாதையில்
வீறு நடை போடுவே (சுகுமார்)

மக்களே சிந்தியுங்கள். ஈழம் என்ற இலட்சியத்திற்காக அனைத்தையும் துறந்து காட்டிலும் மேட்டிலும் அலைந்து வெய்யிலில் தகித்துப் பனியில் உறைந்து களத்துமேட்டில் கருவி தாங்கி நின்ற இந்தத் தோழன் தன்னை இராணுவம் கொன்றால் கூடக் கலங்கியிருக்கமாட்டான். ஆனால் சக இயக்கத்தினரின் துப்பாக்கிக்குண்டுகள் அவனுடலைத் துளைத்தபோது அவன் எப்படித் தவித்திருப்பான்... துடித்திருப்பான்... ஒவ்வொரு போராளியின் உயிரும் விலைமதிப்பற்றது. ஒவ்வொரு போராளியை உருவாக்க எவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் சொற்ப அளவு எண்ணிக்கை உள்ள சர்வதேச விடுதலை ஸ்தாபன முகாம்களில் பயிற்சி பெற்ற போராளிகளை புலிகள் அழிப்பதன் காரணம் என்ன....?

இராணுவத் தகைமை மாத்திரம் கொண்ட தம்மை இவர்கள் முந்திவிடுவார்கள் என்ற அச்சமா...? கருவி ஆளுமையை க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருத்து ஆளுமை முந்தி விடுமோ என்ற கலக்கமா?? புரட்சிகரச் சக்திகளின் தலையெடுப்புப் போராட்டத்தில் மக்களைப் புதிய தலைமைகளின் கீழ அணிவகுத்து விடுமோ என்ற பயமா? ஒரு இயக்கம் தான் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் மற்ற இயக்கங்கள் யாவும் குழி தோண்டிப் புதைக்கப்பட வேண்டும். என்ற குறுகிய நோக்கமா? எதற்காக இந்த வெறித்தனம்.

இவர்களது நோக்கம் எதுவாக இருந்தாலும் அது ஈழப் போராட்டத்தை திசை திருப்பும். எதிரியின் கரங்களைப் பலப் படுத்தும். எதிரிப்படைகளை விட மோசமாக இவர்கள் கொல்வதும், சுற்றிவளைப்பதும், விசாரணை செய்வதும், தண்டனை வழங்குவதும் - புதியதொரு ஆளுமை வர்க்கத்தின் பிரதிநிதிகளாக இவர்கள் செய்யும் பிரயத்தனங்களே. அராஜகத்தையும் ஆதிக்கத்தையும் அரசுக்கட்டிலேற்ற இவர்கள் செய்யும் இந்தச் செயல்கள் ஈழ தேசத்தையே சுடுகாடு ஆக்குவதற்கான முயற்சிகளே.

ஆதிக்கச் சாட்டைகள்
அடித்த காயங்கள்
ஈரம் உலராமல்
இப்போதும் எங்கள் உடலில்!
இரவு பெய்த மழைக்கும்
எம் வீட்டு முற்றத்தில்

அழிபடவேயில்லை
இரத்தக் கறைகள்!

எங்கள் புல்வெளிக்கு
பனித்துளி மகுடமில்லை
இரத்தத்துளி மகுடங்கள்
நம்புங்கள்,
விடுதலையாளர்களை
கொலை செய்யும் கைகள்

விடுதலைக்கு
விதைவிதைக்காது...
(நன்றி:-மனஓசை)

மக்களே! நாமும் இதையே கேட்கிறோம். விடுதலையாளர்களைக் கொலை செய்யும் கரங்களால் எப்படி விடுதலைக்கு விதை விதைக்க முடியும்? ஐக்கியத்தை உடைத்துத் தனித்துவத்தைப் பேண நினைப்பவர்களால்.... கருத்துக்களை கருவிகளால் ஆள நினைப்பவர்களால் மக்களை விடத் துப்பாக்கிகளை நேசிப்பவர்களால் எப்படிப் புரட்சியை வென்றெடுக்க முடியும்.

போராளிகளின் பச்சை இரத்தத்தை எமது பாச பூமியில் சிதறச் செய்பவர்களிடம் நாம் கேட்பது ஒன்றைத்தான். உங்களை நீங்கள் திருத்திக்கொள்ள முயலுங்கள். உங்கள் குற்றச்சாட்டுகளை மக்கள் முன் வையுங்கள். அவர்கள் எப்போதும் சரியான தீர்ப்பை வழங்குவார்கள். அதுமாத்திரமல்ல அவர்கள் உங்கள் ஆயுதங்களை விடச் சக்தி வாய்ந்தவர்கள் அனைத்தையும் விட தயவு செய்து இரத்தவெறி பிடித்து அலையும் மிருகங்களாய் இருக்காமல் மானுடத்தை நேசிப்பவர்களாய் மாறிக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான எமது தோழர்கள் மறைந்தாலும் இலட்சியங்கள் வாழும்- [illegible] புரட்சிக் கதிரின் அணைப்பில் பூமி சிவப்பாகும். இது வரலாறு காட்டப்போகும் உண்மை.

எங்கள்
கனவுகளைக் கலைப்பதற்காக
இமைகள்
பிடுங்கப்பட்டிருக்கின்றன
காலங்காலமாக
காலுதைபட்டாலும்
பூமியானது
புதிய புதிய மலர்களை
பூப்பித்தே கொடுக்கிறது.
ஒரு மகா கவியின்
கைகளை
கட்டிவைத்துவிடுவதால்
காலத்தின் கவிதைகள்
கருச்சிதைவாகி விடுவதில்லை
பூமியைப் புரட்டும்
புழுதியின் கீதங்கள்
புறப்பட்டு வருகிற போது
புல்லின் நுனியிலும்
புதுமை சிலிர்க்கும்
புல்லாங்குழலிலும்
புரட்சி வெடிக்கும்

(மு.மேத்தா)

## விடுதலை

அது
நம் கைகளில்
இப்போது இல்லை
இப்போது மட்டும் தான் இல்லை.

நேற்று
நீயும் நானும்
எரிக்கப்பட்ட போது கூட.
நம்
நிலவும் வானும்
புகைந்த போது கூட,
கிடுகு வேலிகளும்
கிழக்கு வயல்களும்
நம்முடையதாக இருந்தன

வெல்லப்படாத விடுதலையும்
விடுதலைக்கான கனவுகளும்
நம்முடையதாக இருந்தன

இன்று
கரம் உயர்த்தி
கிளர்ச்சி செய்த போது,
வேறு மண்ணில்
கால் ஊன்றி நின்ற போது
ஆயுதங்களுக்காக
யாசித்த போது
பயிற்சிக்காக
இடம், பெற்ற போது
அது
நம் கைகளில் இல்லை.

அது
இப்போது இருவேறு
அரக்கக் கரங்களில்
அகப்பட்டு
கழுத்து நெரிபட்டு,
நம் கைக்கு மாற
நாக்கு வரண்டு
விறிடுகிறது,

வேறு ஒன்றுமல்ல,
தோழனே! அது
எம் விடுதலைதான்.

(நன்றி: வழி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்திலிருந்து

அப்பாவி ஈழமக்கள்மீது ஆக்கிரமிப்புப் படைகள் வான், கடல், தரை மார்க்கங்களால் நவீனரக உயிர்க்கொல்லிக் கருவிகள் சகிதம் நடத்தும் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் எமது தாயகபூமி இரத்தத்தில் மிதக்கிறது. அதேவேளையில் தேசவிடுதலைக்காக இரத்தம் சிந்தி வீரமிகு போராட்டம் நடத்திவரும் விடுதலைப் போராளிகளின் எதிர்த் தாக்குதல்களும் முடுக்கப்பட்டுள்ளன. சிறீலங்கா அரசின் மிலேச்சத்தனமான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிராக ஈழமக்கள் அணிவகுத்து வீதிக்கு வந்து தமது எதிர்ப்பை உறுதியாக உரக்க வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர். மலையக மக்களும் பெருமளவில் இதில் இணைந்துகொள்ள ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சிறீலங்கா அரசின் பயங்கரவாத நடவடிக்கைகள் சர்வதேச அரங்கில் அதன் முகமூடியை கிழிக்க ஆரம்பித்துள்ளன. கடந்த ஆண்டு நோபல் பரிசாளரான அடெட்டு. டெஸ்மண்ட் டுட்டுவை தலைவராகக் கொண்ட சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனம் சிறீலங்காவுக்கான உதவிகளை நிறுத்துமாறு உலக நாடுகளை வேண்டியுள்ளது. அதேவேளையில் எதிர்வரும் ஐ.நா. மனிதஉரிமைகள் கூட்டத்தொடரில் சிறீலங்கா அரசு நிகழ்த்தி வரும் மனித உரிமை மீறல்களைப் பகிரங்கப்படுத்தப் போவதாக இந்தியா அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சர்வதேசக் கண்டனங்களையும் அலட்சியம் செய்து சிறீலங்கா அரச கூலிப்படைகள் அப்பாவி ஈழமக்கள் மீது விமானங்களிலிருந்து குண்டுவீச்சியும், பீரங்கிகள், பீரங்கிப் படகுகள் இவற்றிலிருந்து ஷெல்களை அடித்தும் பெரும் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். அரச பயங்கரவாதத்தின் உச்சக் கட்டமாக அக்கரைப்பற்றிலுள்ள உடும்பன்குளம் என்ற கிராமத்தை சுற்றிவளைத்த அரசகூலிப் படைகளும், ஊர்காவல் படைகளும் அங்கே வயலில் அறுவடை செய்துகொண்ட 103 பேரை உயிருடன் எரித்துக் கொண்ட சம்பவம் அமைகிறது. இக் கிராமமே அரச வெறியாட்டத்தால் சுடுகாடாகிய இச்சம்பவம் ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து ஈழமக்கள் இன்னும் மீளவில்லை.

இத்தகைய இக்கட்டான நிலையிலேயே மலையகத் தொழிலாளர்களின் லயன்களிலே புகுந்த கூலிப் படைகளும், குண்டர்களும் தங்கள் வெறியாட்டங்களைத் தாராளமாகவே காட்டியுள்ளனர். இதனால் மலையக மக்களின் எழுச்சி இவர்களைப் பின்வாங்க வைத்துள்ளது. திருமலையில் சிறீலங்கா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சினால் திரியாய் பகுதியில் வாழ்ந்த ஈழமக்கள் முற்றாகவே இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. அதே சமயம் சிற்றாறில் ஈழப் புரட்சியமைப்பின் போராளிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் 14 சிறீலங்கா கூலிப்படையினரும் அப்பகுதியில் ஜெயமர்த்துவதற்காக ஆயுதப்பயிற்சி அளிக்கப்பட்டு அழைத்து வரப்பட்ட 50 பேரும் கொல்லப்பட்டுள்ளதாக EROS அறிவித்துள்ளது. தனது அடக்குமுறைக் கொடுமைகளை அதிகரிப்பதற்காக மட்டக்களப்பு ஆயித்தியமலையில் மற்றுமொரு இராணுவ முகாமை சிறீலங்கா அரசு அமைத்துள்ளது. பருத்தித்துறை - மருதங்கேணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த ஹெலிகொப்டர் தாக்குதலில் 1 இளைஞர் கொல்லப்பட்டதுடன் 7பேர் படுகாயமடைந்துள்ளனர். 16.2.86 அன்று வவுனியாவில் கூலிப் படையினரின் துப்பாக்கிகள் அப்பாவி ஈழமக்கள் இருவரைப் பலிவாங்கியது. ஈழமக்கள் மீது மட்டுமன்றி கடலில் மீன்பிடித்த இந்திய மீன்பிடிப் படகொன்றின் மீதும் தாக்குதல் நடத்திய சிறீலங்கா கடற்படையினர் 10,000 ரூபா பெறுமதியான வலைகளையும், மீன்களையும் கொள்ளையடித்துள்ளனர். 19.2.86 அன்று திருமலை-கந்தளாய் வீதியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் அரச கூலிப்படைகள் 36க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். அதேசமயம் 6 போர்விமானங்கள் தாவடி, இணுவில், கோண்டாவில், உரும்பிராய் பகுதிகளில் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் 10க்கும் மேற்பட்டோர் பலியாகியதுடன் பல வீடுகள் தரைமட்டமாகின. இதனால் 35 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்து இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தாக்குதல் பற்றி இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

பொத்துவில் தொகுதியில் உள்ள லகுகலை எனும் இடத்தில் ஈழப்போராளிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் 9 கொமாண்டோக்கள் பலியாகியுள்ளதுடன் 11பேர் படுகாயமடைந்துள்ளனர். பள்ளமடுவில் இரண்டாவது தடவையாக EPRLF இன் மக்கள் விடுதலைப் படை நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் கிறுடையில் உழவு யந்திரத்தில் வந்த 25 பொலிஸ் கொமாண்டோக்கள் பலியாகினர். அரசபடைகளினால் கைதுசெய்யப்பட்ட நால்வரின் சடலங்கள் திருமலையில் கடற்கரையில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. 10.2.86 அன்று யாழ். வர்த்தகர் ஒருவர் கூலிப்படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டு காரினுள் வைத்து எரிக்கப்பட்டுள்ளதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடமிருந்து பெருந்தொகை பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றது. கடலின் பலபகுதிகளில் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். 11.2.86 அன்று கடலில் மீன்பிடிக்க சென்ற [illegible] மீனவர்களின் படகின் மீது நடத்தப்பட்ட பீரங்கித்தாக்குதலில் 6 மீனவர்கள் கொல்லப்பட்டதுடன் படகும் சின்னாபின்னமாகியது. அதேசமயம் தொடர்ச்சியான [illegible] நாயகர்களான தனது அடிப்படைகளுக்கு [illegible] வழங்கப்போவதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. 13.2.86 அன்று பூவரசங்குளம் போதனா சாலை ஒன்றின் மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலில் ஆசிரியர், மாணவர் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். இதே தினம் கட்டுவன், தெல்லிப்பளைப் பகுதிகளில் ஹெலிகொப்டர் தாக்குதலில் பலர் படுகாயமடைந்ததுடன் 10க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. மருதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் கடற்படையினர் 6பேர் கொல்லப்பட்டதுடன் ஜீப்பொன்றும் நாசமாக்கப்பட்டுள்ளது. 16.2.86 அன்று எழுதுமட்டுவாள், உடுவெளிப் பகுதிகளில் நடந்த ஹெலிகொப்டர் தாக்குதலில் ஒரு பெண் உட்பட நால்வர் பலியானதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் இந்தக் கொடூர தாக்குதல்களுக்கும், இந்தத் தாக்கால் ஏற்படும் எங்கள் மக்களின் சோகங்களுக்கும் தீரும் வழி.... விடியலுக்கான அறிகுறி.... எதுவும் இன்னும் தென்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் சோபா (வதனி) ஒரு சிவப்பு விடியல்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படை ஈழமக்களுக்கெதிரான தாக்குதல்களிலும் ஈழமீனவர்களுக்கெதிரான தாக்குதல்களிலும் பிரசித்தி பெற்ற ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பாளரின் காரைநகரப் படைத்தளத்தை இரண்டாவது தடவையாகச் சுற்றி வளைக்கிறது. மக்கள் விடுதலைப் படையின் வீரமிகு தாக்குதல் எதிரியை நிலைகுலையச் செய்கிறது. போராளிகளின் குண்டுகள் எதிரிகளின் உடல்களைச் சல்லடையாக்குகின்றன. இறந்ததும், ஒளித்ததும், ஓடியதுமாய் எதிரிகள் மறைகின்றனர். வெற்றி ஆர்ப்பரிப்புடன் எதிரியின் நவீனரக ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு வாகனங்களில் ஏற்றிக் கொண்டும், காயமடைந்தவர்களை கைத்தாங்கலாகக் கொண்டுவந்து வாகனங்களில் ஏற்றிக் கொண்டும் மக்கள் விடுதலைப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் அவர்களில் பலர் கவனிக்க மறந்ததை அவள் கவனித்தாள். ஆம்! முகாமினுள் எதிரியின் குண்டுகள் மக்கள் விடுதலைப் படையின் மகத்தான இரு போராளிகளின் உடல்களைத் துளைத்திருந்தன. அதிலே ஒருவரின் கை அசைவதை அவள் கண்டாள். கண்ட உடனேயே தனக்கே உரித்தான தீரத்துடன் ஒளிந்திருக்கும் எதிரிகள் சுடுகின்ற குண்டுகளுக்குத் தப்பி கரணமடித்து முகாமுக்குள் பாய்ந்தாள். குண்டுகள் துளைத்த போராளிகளில் ஒருவர் வீரமரணமடைந்துவிட்டதையும் மற்றவர் உயிருடன் போராடுவதையும் கண்டுகொண்ட அவள் உயிருடன் இருப்பவரைத் தாங்கிக்கொண்டு முகாமின் வாசலை நோக்கி வரத் தொடங்கினாள்.... அந்தச்சமயம் ஒளித்திருந்த கூலிப்படையின் கோழை ஒருவனின் வெட்கமற்ற துப்பாக்கி துப்பிய வேட்டுக்கள் அந்தப் பதினைந்து வயது உடலை பல இடங்களிற் சல்லடையிட்டன. இப்படி களத்து மேட்டில் இரத்தம் சிந்தி ஈழப்போரில் ஈழப் பெண்களின் பங்களிப்பிற்கான புரட்சிகர அத்தியாயத்தின் வீரம் செறிந்த முகவுரையை எழுதியவர் தான் தோழர் ஷோபா (வதனி) ஈழத்தின் பகைவர்களுடன் போரிட்டு போர்க்களத்தில் குருதி சிந்திய முதல் பெண் போராளியாகப் பிரகாசிப்பதுடன் மாத்திரமல்ல ஈழப் பெண்களிற்குச் சரியான திசைவழியைக் காட்டும் பாதையில் முதற் தடங்களைப் பதித்த வீரப்பெண்ணாகவும் திகழ்கிறார்.

"எங்கள் பிள்ளைகள் எங்களுடன் இல்லை பொழுதே நீ யாருக்காக விடிகிறாய்" என்கின்ற ஈழத் தாய்மாரின் ஏக்கப் பெருமூச்சுக்களும் அவர்கள் வடிக்கின்ற கண்ணீரும் என்று எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமை விலங்குகள் உடைக்கின்றனவோ அன்றுதான் தீரும். ஆனல் கை விலங்குகளை உடைக்க ஆர்ப்பரித்தெழுந்து போரிடும் படையுடன் பெண்களும் இணைந்துகொள்ளவில்லையானல் விடுதலை போர் வெற்றிபெற முடியாது. ஈழமக்களில் பாதிப்பங்கு சனத்தொகையான ஈழப்பெண்கள் இணைந்து கொள்ளவில்லையானல் மக்கள் யுத்தத்தின் வெற்றிக் கோஷத்தைக் கேட்க முடியாது. இந்த உண்மையை உணர்ந்து பல நூறு பெண்கள் விழித்தெழுந்து எங்கள் முன்னணியின் கீழ் அணி திரள்கின்றனர். எனும்போது இன்னும் தூங்கிக் கிடப்போரை நாம் மறந்துவிடலாகாது.

தேச ஒடுக்குமுறை வர்க்க ஒடுக்குமுறை பெண் அடிமைத்தனம் என்னும் கொடுமைகளுக்கு முகம் கொடுக்கும் ஈழப் பெண்கள் சமையலறைகளிலும் வீட்டுச் சுவர்களுக்கிடையிலும் குமுறியபடி ஒடுங்கிக் கிடக்கின்றனர். இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு புயலாய் எழவேண்டிய இவர்களது கோபாவேசம் நான்கு சுவர்களுக்கிடையே சோக அலைகளாக எழுந்து தணிந்து விடுகிறது. பிற்போக்குத் தனமான சொத்துரிமைச் சமூக அமைப்பின் உருத்தறப்போன கருத்துக்களும், மரபுகளும் பெண்களின் கோபாவேசங்களைக் கொலைசெய்துவிடுகின்றன. இவற்றையும் மீறிக் களத்து மேட்டில் பெண்களை அணிதிரட்டி அணி வகுக்க வைப்பதற்குக் கடினமானதும் விடாப்பிடியானதுமான உறுதியும் முயற்சியும் இன்று நிலவும் சமூக அமைப்பு பற்றிய தெளிவான பார்வையும் தேவை. இவற்றை ஓரளவு எம்மகத்தே கொண்டு போர்முனையை நோக்கி ஈழப் பெண்களைப் போராளிகளாக நகர்த்தும் புரட்சிகர வேலையை ஈழமக்கள் புரட்சிகர முன்னணி செய்து வருகிறது.

இவ்வாறு நெஞ்சில் உறுதியும், தெளிவான பார்வையும் செயல் ஆற்றலும் கொண்டு நிமிர்ந்தெழுந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பதாகையின் கீழ் அணிதிரண்ட பல நூறு பெண்களுடன் தோழர் ஷோபாவும் தன்னை இணைத்துக் கொண்டார். ஈழப்பெண்களை அணிதிரட்டி அமைப்பாக்கும் பணியில் ஈழ மக்களிடையே தன்னை இச் சிறு வயதில் ஈடுபடுத்தி ஓய்வின்றிப் பணியாற்றிய தோழர் ஷோபா தனது இறுதிப் பணியை இரத்தத்தால் எழுதி முடித்துக்கொண்டார். எதிரியின்பலம் மிக்க தளத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலில் தன்னுயிரை இரத்த சாட்சியாகத் தோழர் ஷோபா தந்தார்.

தோழர் ஷோபாவைத் தான் இழந்து விட்டோம். அவர் நேசித்த இலட்சியங்களை என்றுமே நாம் இழக்கமாட்டோம். எம்மிடமிருந்து ஷோபாவைப் பிரித்த எதிரிகளால் எங்கள் சுதந்திரக் கனவுகளைப் பறிக்க முடியாது. போரிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியைக் குலைக்க முடியாது. இறுதி வெற்றியைத் தடுக்க முடியாது. போராட்டம் தொடர்கிறது. போராடும் படையுடன் ஷோபா வாழ்கிறார். களத்து மேட்டின் இரத்த சாட்சியமாய் ஒளிர்கிறார். ஈழப் போராட்டத்தின் சிவப்பு விடியலாய் தெரிகிறார். அவர் வழியில்..... அவர் காலடிகளைத் தொடர்ந்து ஈழப் பெண்கள் ஆயிரம் ஆயிரமாய் அணிவகுக்கின்றனர்.



" இப்பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்!"

# உணர்வுகள்

உலகில் இரண்டு வர்க்கம்
உழைத்துத் தேயும் வர்க்கம் ஒன்று -அதை
உறுஞ்சி வளரும் வர்க்கம் ஒன்று.
உணர்வு சரியாய் வளர்ந்தால் நிலைக்கும் வர்க்கம் ஒன்றே

உங்கள் நாட்டில் உங்கள் கைகள்
உயர்ந்து நிற்க வேண்டும்
உரிமையோடு நிலை நிறுத்தும்
உறுதியோடு உணர்வுகளைத் தட்டுங்கள்.

உண்டு களித்து உறங்கிடும்
உல்லாச புருஷர்களே
உங்கள் உணர்வைக் கொஞ்சம்
உற்சாகமாய் தட்டி எழுப்புங்கள்

உலகம் எங்கோ போகிறது
உங்கள் உணர்வு தினமும் உறங்குகிறது.
உழைக்கும் கரங்கள் உருக்குலையும்
உண்மை நிலையைச் சிந்தியுங்கள்

-சிகரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் உலகிற்கு புதிய பரிமாணம் கொடுக்கும் அகதித் தொழிலாளர்கள்!

"அகதித்தொழிலாளர்கள் தொழில் உலகிற்கு ஒரு புதிய பரிமானத்தைப் படைத்திருக்கிறார்கள்!! கடந்தமாதம் 19,20 21ம் திகதிகளில் இவ்றி (IVRY) இல் நடைபெற்ற பிரான்சின் மிகப்பெரிய தொழிற்சங்கமான C-G-T இன் மாவட்டக் காங்கிரஸில் உரையாற்றும் போது தோழர் க.கலாமோகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவோபுவாத் தொழிற்சங்கத்தின்சார்பில் கலந்து கொண்ட அவர் தனது உரையில் கோடிட்டுக் காட்டிய விவரங்கள் வருமாறு:-

1. அகதித் தொழிலாளர்களின் பிரச்சினைகள் நீண்டகாலமாக இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. இவர்கள் தொழில் உலகத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்திருக்கின்றார்கள்.

2. முதலாளித்துவம் சுரண்டலுக்கு வசதியான பல வசதிகளை இவர்களிடம் காணுகின்றது. முதலாவது வசதி, மொழியாகும். அநேகமாக அகதித் தொழிலாளர்கள் மொழி அறிவில் (பிரெஞ்சு) பின்தங்கி நிற்கின்றார்கள். ஏனெனில் அகதிகள் எல்லோருமே பிரெஞ்சுக் காலனிகளில் இருந்து வருபவர்கள் அல்லர். முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு மொழிப் பற்றாக்குறை உதவுகின்றது. மொழிப்பற்றாக் குறை இருப்பதால் அகதித் தொழிலாளர்கள் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தமாட்டார்கள் என முதலாளித்துவம் நினைக்கின்றது.

3. இரண்டாவது வசதி விசாவாகும். அகதித் தொழிலாளர் பலரிடம் நீண்டகால விசாக்கள் இல்லை. மூன்று மாதத்திற்கு ஒரு தடவை விசாக்கள் புதுப்பிக்கப்படவேண்டும். இது ஒரு இக்கட்டான பரிதாப நிலைமை. தற்காலிக விசா, முதலாளித்துவம் நினைத்த வேளையில் ஒரு அகதித் தொழிலாளியை வேலை நீக்கம் செய்ய உதவக்கூடியது.

## இலங்கை அகதிகள்

"இனவாதத்தாலும் சர்வதேச ஏகாதிபத்திய நலன்களினாலும் இலங்கை எரிந்துகொண்டிருக்கின்றது. ஆகவே தமிழ் பேசும் மக்கள் நாட்டைவிட்டுத் தப்பியோடி அகதிகளாக வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## EPRLF இன் மக்கள் விடுதலைப் படையின் முன்னணிப் போராளிகள் விடுதலைப் புலிகளால் படுகொலை!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையின் (PLA) முன்னணித் தோழரும் சர்வதேச புரட்சிகர விடுதலை முன்னணியின் பாசறையொன்றில் பயிற்சி பெற்றவருமான தோழர் அமீன் சிறீலங்கா இராணுவத்துக்கெதிராக தாக்குதல் நடத்த வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளால் வஞ்சகமாக அழைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். சர்வதேச முகாம்களில் பயிற்சிபெற்ற ஈழப் போராளிகளைத் திட்டமிட்டுக் கொன்றுவரும் புலிகளின் புனிதப் பணியில் இது இரண்டாவது அத்தியாயமாகும் (முதல் தோழர் சேனன்). ஈழப் போராளிகளைக் கொலைசெய்வதில் சிறீலங்கா இராணுவத்தைவிடப் பலம் வாய்ந்த விடுதலைப்புலிகள் இக்கொலையை 'தெரியாமல் நடந்துவிட்டது' என தமது 'சத்தியமான' நியாயப்பத்திரத்தில் தெரிவித்துள்ளனர். ஈழப் போராளிகளையும், சிறீலங்கா இராணுவத்தையும் வேறுபடுத்தியறிய முடியாத புலிகளின் போராட்டத் தரத்தை ஈழ மக்களை அறியவைத்துள்ளது. இத் தோழரின் கொலையை அடுத்து ஈழ மக்கள் புலிகளுக்கு பெரும் எதிர்ப்பைக் காட்டியுள்ளது. யாழ். நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதும், 3000க்கும் மேற்பட்ட ஈழ மக்கள் தோழர் அமீனின் இறுதிச் சடங்கில் முனைப்பாய்க் கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது. இவ்விறுதிச் சடங்கில் தமிழீழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை இயக்கம், T.T.புலி புரட்சிகர அமைப்பு, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய இயக்கங்களும் கலந்து கொண்டன. மேற்படி தோழர்களின் இறுதிச்சடங்கில் கலந்து தோழர் அவர்களுக்கு தமது சிறப்பு வணக்கத்தைத் தெரிவித்து நின்று கொண்ட 3000க்கும் மேற்பட்ட T.T.புலிகளிடையே உரையாற்றிய EPRLF இன் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா மீண்டும் மீண்டும் துப்பாக்கிகள் அனைத்தும் பொது எதிரிக்கு எதிராகவே என்ற கொள்கையினை அழுத்தி வலியுறுத்தினார்.

அதேசமயம் EPRLF க்கு எதிரான புலிகளின் தொடர்ந்த வெறியாட்டத்தில் இயக்க முன்னணித் தோழர்களைத் தொடர்ந்து EPRLF இன் முகாம்கள் விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டன. சிறீலங்கா இராணுவத்தை விஞ்சும் வகையில் புலிகள் T.T.புலி போராளிகளைக் கைது செய்ததுடன் ஆயுதங்களையும் கைப்பற்றினர். அதுமாத்திரமல்ல மற்றுமொரு PLA போராளியான தோழர் பிரதாபனையும் சுட்டுக்கொன்றனர். அத்தோடு பெண் போராளிகளைக் கடத்தும் புலிகள் அநியாயத்தையும் ஆரம்பித்து வைத்தனர். தோழர் பிரதாப்பின் மரணச் சடங்குகள் சாவகச்சேரியில் நடைபெற்றது. இதன்போது சாவகச்சேரியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு பெருந்தொகையான மக்கள் இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்டனர். இச்செயல்களினால் நமக்கு எதிராக எழுந்துள்ள T.T.புலிகளின் எதிர்ப்பையும், கண்டனத்தையும் திசைதிருப்பும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய அளவில் T.T.புலிகளை புரட்சிகர விடுதலை முன்னணிக்கெதிராக பொய்ப்பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டனர். போதும் துப்பாக்கிகள் அனைத்தும் பொது எதிரிக்கு எதிராகவே என்ற EPRLF இன் கொள்கை புறம் போகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காணிப்புக்குழு செயற்பட்ட காலத்தில் அரசபடைகளால் 600 ஈழமக்கள் படுகொலை!

சர்வதேச அரங்கில் நல்ல நியாயவான்களைக் காட்டிக்கொள்ள சிறிலங்கா அரசு நியமித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு செயல்பட்ட காலத்தில் ஏறத்தாழ 600க்கும் மேற்பட்ட ஈழமக்கள் சிறிலங்கா அரசபடையினரால் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர் எனவும் மேலும் 400க்கும் மேற்பட்டோர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனருடன் 200 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என சென்னை 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## ஈழப்போராட்டத்தில் சர்வதேசச் சதிகளின் நெருக்கீடு !

ஈழப்போராட்டத்தை இடைநிறுத்தி தமது சகபாடியான ஜெயவர்த்தனவின் ஆட்சியைக் கொண்டு நடாத்த இலங்கையை அமெரிக்கச் சார்புடைய தளமாக அமைக்க - இஸ்ரேலிய கூட்டுச் சதிகள் பாரிய அளவில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதன் ஒரு அம்சமாகவே ஈழவிடுதலை இயக்கங்கள் சிலவற்றிடையோ பெரிய அளவிலான [illegible] ஊடுருவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. மற்றுமொரு அம்சமாக அமெரிக்காவிலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் சிலரை அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அதிகாரிகள் சந்தித்ததும் அதன் பின்னர் மாநில சுயாட்சியுடன் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகட்குத் தீர்வு காணலாம் என அறிக்கை விட்டதும் அதைத்தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியான இந்திய லோகதள் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணியசுவாமி ஈழப்போராளிகளுடன் சேர்ந்து போராட 10,000 பேரைத் திரட்டப் போவதாக வெற்றறிக்கை விட்டதும் தெரிந்ததே. இப்போது ஈழத்தீவுகளில் சிறிலங்கா

இராணுவத்துடன் இணைந்து மனித வேட்டை நடத்திவரும் 'மொசாட்'டின் தாய் நாடான இஸ்ரேல் ஈழமக்கள் மீது 'பொங்கியெழும்' புதிய பாசத்துடன் அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பிரதிநிதிகளையும், டாக்டர் சுப்பிரமணிய சுவாமியையும் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி ஆராய வரும்படி அழைத்திருக்கிறது. தம்மைச் சுற்றிவரும் சர்வதேசச் சதிகளுக்கெதிராக ஈழமக்களும், விடுதலை இயக்கங்களும் விழிப்பாக இருக்க வேண்டும்.

'போராளிகளின் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் படைகள் அப்பாவி மக்களைச் சுட்டுத் தள்ளுகின்றன.' — அமெரிக்க அரசு அறிக்கை.

'தமிழ்த் தீவிரவாதிகள் ஒரு பெருந் தாக்குதலை நடத்துகின்ற பட்சத்தில் அதனைச் சமாளிக்க எதிர்த்தாக்குதல் ஒன்றினை மேற்கொள்ளும் அளவில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் ஆயத்த நிலையில் இல்லை. தீவிரவாதிகளின் நேரடித் தாக்குதலுக்கு அல்லது கண்ணிவெடித் தாக்குதலுக்கு முகம் கொடுக்க நேரிடும் போதெல்லாம் அப்பாவிப் பொதுமக்களை எவ்விதபாகுபாடுமின்றி கொடூரமானமாகச் சுட்டுத்தள்ளுவது இலங்கைப் பாதுகாப்புப்படைகளுக்குச் சகஜமான சங்கதியாகிவிட்டது!' இவ்வாறு அமெரிக்க அரசு உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

'காணாமல் போகும் மக்கள்': ஐ.நா. பட்டியலில் சிறீலங்கா.

மனித உரிமை மீறல்களில் புதிய வரலாறு படைத்துவரும் சிறீலங்கா அரசு 'அரசியல் மோதல்களின் போது மக்கள் அதிகரித்த அளவில் காணாமல் போகின்ற நாடுகள்' பட்டியலில் இலங்கையையும் உள்ளடக்கி அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ அச்சுறுத்தல்: ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எச்சரிக்கை.

"இராணுவ முகாம்களின் அருகாமை; பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறு என்று முழங்கி வெகு ஜனங்களை கிளர்ந்தெழுங்கள்' என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரத்தை EPRLF வெளியிட்டுள்ளது. இப்பிரசுரத்தில்... "எம்மை ஒடுக்கும் சிறீலங்கா அரசு யாழ். குடாநாட்டுக்குள் செயற்படுத்த அதிகாரமளித்திருக்கும் 'பாதுகாப்பு'வலயம் குடாநாட்டை இராணுவமயப்படுத்தும் நோக்கத்தின் முதற்படியே ஆகும். இதனடிப்படையில் இவ்வலயப்பகுதிக்குள் மென்மேலும் இராணுவம் குவிக்கப்படும். பாதுகாப்பு வலயம் மேலும் விஸ்தரிக்கப்படும். இறுதியில் இந் நிலைமை யாழ். குடாநாட்டை இராணுவமயப்படுத்தி முற்றிலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் கொண்டு போய்விடும். இம் முயற்சி யாழ். குடா நாட்டில் வெற்றி பெற்றின் இதே வழிமுறை ஈழமெங்கும் கைக்கொள்ளப்படும். இப்பாரிய அபாயத்தை எதிர்நோக்கும் அதே வேளையில், இத்திட்டத்தினால் எம் மண்ணில் நாம் நடமாட முடியாது, எமது ஆலயங்களில் நாம் வழிபட முடியாது, எமது வைத்தியசாலையில் நாம் சிகிச்சைபெற முடியாது, எமது பாடசாலைகளில் நாம் கல்விகற்க முடியாது. எல்லாம் 'பாதுகாப்பு வலயம்' என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்படுகிறது. மக்களோடு நெருக்கமான தொடர்புடைய நிறுவனங்களைப் பறித்து படைகளின் கைகளில் கொடுப்பது மக்களை விரட்டியடித்து படைகளை நிலைகொள்ளச் செய்யும் தந்திரோபாயமே. இவ்வாபத்தை, இராணுவ அச்சுறுத்தலை நாம் ஒன்றுபட்டுமே உணர்ந்து உடனடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்..." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு வலயப் பிரகடனம் பல்வேறு அமைப்புக்களாலும் பலத்த கண்டனத்துக்குள்ளாகி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிரான போராளிகளின் தாக்குதல்கள் வேகம் பெறுகின்றது.

ஈழத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறீலங்கா அரச கூலிப்படைகளுக்கெதிரான தமது தாக்குதல்களை ஈழப் போராளிகள் விஸ்தரித்துள்ளனர். அண்மையில் கொக்குக்கருகே குறிஞ்சாத்தீவில் நேரடி மோதல் ஒன்றில் தமிழ் ஈழ விடுதலை இயக்க (TELO) போராளிகளால் 52 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பம்மைமடுவில் EPRLF இன் மக்கள் விடுதலைப் படை நடத்திய தாக்குதலில் சிறீலங்கா கூலிப் படையினர் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நயினாதீவுக்கருகில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கடற்கண்ணி தாக்குதலில் 15 சிறீலங்கா கடற்படையினர் பலியாகினர். இதுதவிர கடந்த ஜனவரி மாதத்தில் அரசபடையினருக்கெதிராக 30 தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளதாகவும் இவற்றில் 135க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும், மேலும் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் அறிக்கை கூறுகின்றது.

## ஈழம் செய்திப் பலகை.... ஈழம் செய்திப் பலகை..

- யாழ் - கச்சேரி முன்பாக மறியல் போராட்டம் பெரும்பான்மை கச்சேரி ஊழியர்கள் கபட நாடகம்: அமைச்சர் அத்துலத் முதலியின் பசப்பு வார்த்தைக்குப் பலியாகி, கச்சேரி தினவரவுப் பதிவேட்டை வெளியே எடுத்து கையொப்பம் இட்டுள்ளனர்.
  யாழ். குடாநாடெங்கும் வலயச் சட்டத்திற்கெதிரான தீவிர பிரச்சாரம். நிலைமையை விளக்கி EPRLF சுவரொட்டி. பொதுமக்களின் பங்கை வலியுறுத்தி தோழர் டேவிட்சன் உரை.

- 'சமரசத்துக்கும் சரணாகதிக்கும் இடமில்லை, விடாப் பிடியான போராட்டமே விடிவுக்கு வழி'.
  அரசாங்க அதிகாரிகளுடன் நடத்திய இரகசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாட்டுடன் எதிரொலி: மறியல் போராட்டத்தை இடை நிறுத்த அன்னையர் முன்னணி இணக்கம். சிறீலங்கா படையினருக்கோ தரைப்படையா, கடற்படையா, வான்படையா கூடச் செத்தது என்பதில் முரண்பாடாம்.

- அடக்கும் அரசை எதிர்க்கத் துணிந்த மலையக மக்கள். சிங்களப் பெருமுதலாளிகளின் கடைகள், லொறிகள், சொத்துக்கள் எரிப்பு. அரசவெறியாட்டத்தில் பலர் அகதிகளாகினர்.
- மல்லித்தீவு இராணுவ முகாம் மூன்று தினங்களாக போராளிகளால் முற்றுகை. தொடர்ச்சியாக மோட்டார் தாக்குதல்; சுற்றாடல்களில் உள்ள பாலங்கள் தகர்ப்பு; உணவு, குடிநீர் இல்லாமல் கூலிப் படை தவிப்பு.

## மேலும் சில செய்திகள்:

- ஈ.ரோஸ் (ஈழப் புரட்சியமைப்பு) இயக்கத்தால் கடத்தப்பட்ட பிரித்தானிய உளவாளியான திருமதி பென்னி லொப் கிப்பினை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் EROS கையளித்துள்ளது.
- சுவிற்சலாந்துப் பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்த சிறீலங்கா வெளிநாட்டமைச்சர் ஹமீதுக்கு கறுப்புக் கொடிகள், சுலோகங்கள் மூலம் எதிர்ப்புத் தெரிவித்தமைக்காக 40 சுவிஸ் வாழ் ஈழ மக்களை சுவிற்சலாந்து பொலிசார் கைது செய்துள்ளனர்.
- மினிசினிமாக்கள், ராம்போ, தமிழகத்து மசாலா சஞ்சிகைகள் என நமது நாகரீகம் ஈழவீதிகளில் மரணித்துக் கொண்டிருக்கையில் இயக்கங்களின் கலாச்சாரப் பணிகட்கு தெம்பாகவும், ஈழ மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையிலும் 'மாற்று' எனும் வித்தியாசமான இலக்கிய-அரசியல் இதழ் (காலாண்டு) யதார்த்தத்துக்கேற்ப சுழந்து ஈழத்தில் வெளிவந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை தொகுப்பு விமர்சனம்:
# மரணத்துள் வாழ்வோம்

மரணத்துள் வாழ்வோம். தொகுப்பாளர் உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராசன். யாழ்ப்பாணம்: தமிழியல். 1985 நவ. 170 பக்.

உலகக் கவிஞர்கள் அனைவரையும் முழுமையாகக் கவர்ந்த கவிதைக்கான கருப்பொருள் போர் ஆகும். பெரும்பாலான புராணங்கள், இதிகாசங்கள், புராண நாடகங்கள், கவிதைகள் அனைத்திலும் மையப்பொருளாக போர் அமைந்திருப்பதை நன்றாக மீண்டும் மனதிற் கொள்ள வேண்டும். போர் இந்த அளவிற்கு கவிஞர்களைக் கவர்ந்திருப்பதற்கான காரணம், அது மக்களை வாழ்வின் விளிம்பிற்குத் தள்ளி மரணத்தையும் வாழ்வையும் நேரடியாகச் சந்திக்க வைத்து விடுகின்றது. அமைதியும் பொருட்செழிப்பும் உள்ள காலத்தில் வெளிப்படாத தங்கள் சொந்த உடல், ஆன்மா பற்றிய சில முக்கியமான உண்மைகளை அதாவது அச்சம், பொறுமை, வீரம் அல்லது கோழைத்தனத்தை தாங்களே அறியுமாறு செய்வதன் மூலம் சமூகம் முழுவதும் ஒன்றிணைந்து வாழ்வதற்கான ஒரு கூட்டுணர்வையும் தோழமையையும் அளிக்கிறது. கவிஞர்களோ இந்த உண்மையை முன்கூட்டியே உணர்ந்து அதனுள் ஆழச் செல்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட இந்த உண்மையின் ஈழ நிலைப்பட்ட கவிதா வெளிப்பாடே "மரணத்துள் வாழ்வோம்" என்ற நூலாகும். ஈழத்தில் நடந்துகொண்டிருக்கும் போரின் உண்மைத் தன்மையை அநுபவ ரீதியாக உணர்கின்ற 31 கவிஞர்களின் 82 கவிதைகளை உள்ளடக்கிய சிறந்த படைப்பு.

இந்த நூலின் கவிதைகள் எந்த அளவுக்கு அறிவு ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் சிறப்பாக அமைகிறதோ அதேயளவு சுருக்கமாகவும், கருத்துச் செறிவாகவும் ஈழத்துக் கவிதை இலக்கியத்தினது வளர்ச்சிப் போக்குப் பற்றிய சேரனின் முன்னுரையும் அமைகிறது.

"கவிஞர்கள் மனிதருள் இயல்பு கடந்தவர்கள்; மொழியின் புத்தமைப்பாளர்கள்; சிந்திக்க முடியாததையும் சிந்திப்பவர்கள்; கூற முடியாததையும் கூறுபவர்கள்" என ஷான் ஷாக்கஸ் லெபல் என்ற பிரெஞ்சு எழுத்தாளர் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது. மனித நாகரிகமே வெட்கித் தலைகுனியும்படியான கொலைகளும், கொடுமைகளும், அழிவுகளும் நம்தேசத்தில் நிகழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டும் உணர்ந்தும் அதைச் சொல்ல வார்த்தைகள் இல்லாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோர் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் போது இந்தக் கவிஞர்கள் தங்களது துணிச்சல் மிக்க கருத்துப் படிமங்களால் வீச்சுடன் வெளிக்கொணர்ந்து விடுகின்றனர். சேரனின் "யமன்" என்ற கவிதையின் சில வரிகளை (பக்61) இங்கு உதாரணமாகச் சுட்டிகாட்டுதல் பொருந்தும்.

"காற்று வீசவும்
அஞ்சும் ஓர் இரவில்
நட்சத்திரங்களிற்கிடையே இருக்கிற
அமைதியின் அர்த்தம் என்ன
என்று
நான் திகைத்த ஓர் கணம்
கதவருகே யாருடைய நிழல் அது
நான் அறியேன்
அவர்களும் அறியார்
உணர்வதற்கு முன்
அதுவும் நிகழ்ந்தது
மரணம்"
. . . . . . . . . .
. . . . . . . . . . . . . . .

மரணத்தை நேரடியாகச் சந்திக்கின்ற போது ஏற்படுகின்ற உணர்வு, மனதுள் திரளாகக் குவிந்துள்ள அச்சம், வெறுமை ஆகியவை இங்கு வீச்சுடன் வெளிப்படுத்தப்படுகிறது. இதேபோல"உயிர்ப்பு" (பக்66) என்ற கவிதையில்

. . . . . . . . . . . . .
"இம்மண்ணிலிருந்து
நாளை நான் உயிர்ப்பேன்
மூன்று நாள் என்பது அதிகபட்சம்
எனது புதைகுழி மீது
முதலாவது புல் முளைவிடுமுன்பு
நான் உயிர்ப்பேன்"

எனத் துணிச்சலுடன் அறிவிக்கிறார். கற்பனையை வீரக்கொழுவிலேற்றி விடும் திறமை கொண்ட கவிதைகள் இவை.

போர் குறித்து கவிஞர்களின் போக்கு எச்சரிக்கைக்குரியதாகவே இருந்து வருகிறது. உலகப் போரின் அழிவுகளுக்குப் பிறகு மனித இனம் பட்ட சொல்லொணாத் துன்பத்தைப் பாடியவர்கள் யுத்தத்தை வெறுப்பவர்களாக யுத்தத்தின் கொடுமை பற்றி மட்டுமே எழுதத் தொடங்கி விட்டனர். ஆனல், இன்றைய உலகச் சூழ்நிலையும் வல்லரசுகளின் ஆயுதப் போட்டியும் போர் என்பது வேவோர் மனிதனின் தலைமீது கட்டாயமாக ஏற்பட்ட சுமையாகி விட்டது விரும்பியோ விரும்பாமலோ அந்தச் சுமையைத் தாங்கவேண்டியவனாகிவிடுகிறான். இதனல் மேற்குலக நாடுகளின் கவிஞர்கள் போரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமை பற்றியும், அழிவு பற்றியும் பாட மூன்றும் உலக நாடுக ளின் கவிஞர்கள் அழிவிலிருந்து பிறக்கின்ற வீரம், தோழமை, கூட் டுணர்வு, சுதந்திரம், மனிதத்துவம் பற்றிப் பாடுகின்றனர். யதா ர்த்தமும் அதுவே. இந்தத் தன்மை "மரணத்துள் வாழ்வோம்" க விதைகள் எல்லாவற்றிலுமே தென்படுகிறது. இந்த விழிப்புணர்வை கையை உயர்த்தி முழு உலகிற்கும் கேட்குமாறு "உயிர்த்தெழுந்த நாட்கள்" (பக்.39) என்ற கவிதையில் ஜெயபாலன் பின்வருமாறு கூறுகின்றார்.

..........
" சாவை உதைத்து
மண்ணில் எம் காலை ஆழப் பதித்து
மரண தேவதை இயற்கையாய் வந்து
வருக என்னும் இறுதிக் காலம் வரை
மூக்கும் முழியுமாய்
வாழவே எழுந்தோம்."

இதேபோலவே செழியனும் "மரணம்" (பக்.146) என்ற கவி தையில்

............
"எங்களை நெருங்கி வருகிற
மரணத்திற்காக
நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்"

என்று கூறுகின்றார். சேரன் குறிப்பிடுவது போல இந்தக் கவிதை கள் சத்தியமானவை மரணத்துள் வாழ்ந்து போராடிப் பெற்றவை கள்.

நெடுந்தீவுக்குச் சென்ற படகு கடற்படைக் காடையர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டு வெற்றுடல்களை குருதியுடன் சுமந்து வரும்போது நிலாந்தன் "கடலம்மா" (பக்.153) வேதனை சுமந் த கோபத்துடன்

..........
"கடலம்மா நீ மலடி
எனந்தத் தீவுகளை
அனாதரவாய்த் தனியே விட்டாய்"

எனச் சபிக்கும் போது மிக ஆழ்ந்த சோகம் எம் நெஞ்சை வரு டிச் செல்வதை உணர்கிறோம்.

இக்கவிதைத் தொகுப்பில் எமது காலகட்டத்தின் மூத்த கவிஞர் கள் – முருகையன் நுஃமான் சாருமதி போன்றவர்களுடன் நமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையின் இளம் கலைஞர்கள் பலர் எழுதியுள்ளனர். இதைவிட மூன்று சிறந்த இளம் பெண் கவிஞர்களான ஔவை, ஊர்வசி, மைத்திரேயி ஆகியோரின் பெண் நிலைப்பட்ட அநுபவங்களும் கவிதைகளாக வந்துள்ளன. தமிழ்க் கவிதைகள் என்று நோக்கும் பே போது நாம் உடனடியாக ஒப்புநோக்குவது தமிழகத்தின் கவிதைகளைத் தான். இந்த வகையில், தீர்ப்புகளைத் திருப்பி எழுதப் புறப்பட்ட தரமான கவிஞர்கள் எல்லோரும் மூன்றும்தர வியாபார சினிமாவிற்கு தமது ஆன்மாவை விலைபேசி விற்றுவிட்டு கவிதை வியாபாரம் செய்து வருகையில் ஈழ மக்கள் மத்தியில் தோன்றிய எமது இளம் கவிஞர்களின் குரல் வங்கக் கடலையும் தாண்டி முழு உலகும் கேட்குமாறு பலமாக ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

இத்தொகுதியில் இடம்பெற்ற கவிதைகள் அனைத்துமே மிகச் சிறந்தவை. ஒன்றையொன்று விஞ்சும் கலைச்சுரும் கொண்ட படைப்புக்கள். மிகச்சிறந்த குறியீடு, படிமங்கள் மூலம் உலகுக்கு எங்களது கதையைச் சொல்கின்றன. கவிதைகளை வாசிக்கும் போது எல்லாக் கவிதைகள் மீதும் எமது இதயம் உட்கார்ந்து கொள்கிறது. சிலவற்றில் சற்று அதிக நேரம் உட்கார்ந்து கொள்கிறது. சில கவிதைகள் இதயத்துக்குள்ளே சென்று எப்போதும் நம் சிந்தனையைக் கிளறிக்கொண்டே இருக்கின்றன.

கவிதைத் தொகுதியை வாசித்து முடிக்கையில் ஜார் மன்னர் ஆட்சிக்கெதிராக குரலெழுப்பிய மிகச் சிறந்த பைலே ருசியக் கவிஞரான குப்பாலாவின் "அங்கே செல்லுவது யார்" என்ற கவிதை தான் நினைவுக்கு வருகிறது. நாம் வாழ்கிற விதம் இறப்பை விடச் சற்று மேலானதாகவே இருக்கிறது. இதைக் குப்பாலா கீழே வருமாறு கூறுகிறார்.

"அங்கே சதுப்பு நிலத்திலும் காட்டிலும் செல்கின்றவர் யார்?
அந்த மிகப்பெரிய கூட்டத்தில் செல்பவர் யார்?
பைலோ ருசிய மக்கள் அங்கே செல்கின்றனர்!
தங்கள் மிக மெலிந்த தோள்களில் அவர்கள் எதைத்
தாங்குகின்றனர்
தங்கள் மிக மெலிந்த கைகளிலே எதைத்தாங்குகின்றனர்
– அவர்கள் தாங்குவது அநீதியையும் பொய்களையும் தான்!
இந்தப் பொய்கள் அனைத்தையும் அநீதியையும் அவர்கள்
எங்கே தூக்கிச் செல்கின்றனர்?
எவருக்குக் காட்டுவதற்காக அவற்றை எடுத்துச் செல்கின்றனர்
– உலகம் முழுவதற்கும் காட்டுவதற்காக!
ஆனால், இலட்சக் கணக்கான இவர்களை கூடத்திலிருந்து
எழுப்பியவர் யார்?
உங்கள் சுமையை இப்போதே ஏற்றுக் கொள்ளுங்கள்
சொல்லுங்கள் என்று சொன்னவர் யார்
வருத்தமும் துயரமும் தான் அவர்களுக்கு அவ்வாறு
கற்றுக்கொடுத்தன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல், யுகங்களாக நசுக்கப்பட்டவர்கள் பின்னர் நாடுவது
தான் என்ன!
குருடர்களுமான இவர்கள் எதை நாடுகிறார்கள்
—மனிதர்கள் என்று அழைக்கப்பட!

"மரணத்துள் வாழ்வோம்" தொகுப்புக் கூறுகின்ற செய்தியும் இது தான். பேரினவாத அரசின் பயங்கரவாதத்தையும், அழிவு நடவடிக்கைகளையும், பொய்களையும், அநீதிகளையும் மூட்டையாகக் கட்டி உலகுக்குக் காட்டி நாமும் மனிதர்கள் என்று அழைக்கப்பட நீதி கோருகின்றது. உலகுக்கு ஸ்ரீலங்கா இனவெறி அரசை தோலுரித்து நிர்வாணமாகக் காட்டுகிறது.

இயக்கங்களுக்கிடையே உள்ள அன்பில்லாத நேசிப்பினாலோ, வல்லரசுத் தலையீடுகளாலோ எமது போராட்டம் பின் தள்ளப்படினும் இந்தக் கவிதைகள் எமது மக்கள் மரணத்துள் வாழ்ந்த கதையை காலங்காலமாகச் சொல்லி உலக மனச்சாட்சியை அதிர வைத்துக்கொண்டே இருக்கும்.

''''''''''''''''''பார்த்தசாரதி''''''''''''''''''

---

தோழர்களே!

ஈழப் போராட்டத்தைச் சூழ்ந்து நிற்கும் எதிர்ப் புரட்சிச் சதிகளின் முகத்திரைகளை கிழிக்க வல்ல... போராட்டத்தை புரட்சிகரப் பாதையிலே எடுத்துச் செல்லும் கருத்துக்களை தாங்கிய உங்கள் ஆக்கங்களையும், நெறிப்படுத்தல்களையும் 'தமிழ் முரசு' எதிர் பார்க்கிறது. அனைத்துத் தொடர்புகட்கும்....

THE EDITOR
'TAMIL MURASU'
EELAM LIBERATION COUNCIL
(FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS -

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்பிது நிலையத்தில் அகதிகள் பிரச்சனை "இலங்கைப் படுகொலைகள்" புத்தகக் கண்காட்சியில்

அகதிகள்! பிரான்ஸிய வரலாற்றில் முக்கிய பங்கினை வகிக்கும் பாத்திரங்கள். இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வருவதில் பிரான்சிற்கு ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு. வருடா வருடம் ஆயிரக்கணக்கான அகதிகள் வந்தவண்ணம் இருக்கின்றனர். இவர்களுடைய முக்கியத்துவத்தை உறுதி செய்யத்தக்க நிகழ்ச்சி ஒன்று கடந்த மாதம் பரிசில் நடைபெற்றது. அதாவது, இங்குள்ள உலகின் மிகப்பெரும் கலைநூ தனசாலையான ஜோர்ஜ் பொம்பிது நிலையம் அகதிகள் பிரச்சினைக்கு முக்கியத்துவம்கொடுத்து, ஒரு வாரம் இது தொடர்பான கருத்தரங்குகள், கண்காட்சிகள் என்பவற்றை நடத்தியது.

* இங்கு வாழும் அகதிகளின் நிலமை,
* அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்,
* அவர்கள் மீது போடப்படும் சுமைகள்,
* அவர்களது எதிர் காலம்,

போன்ற பல விடயங்கள் பலவித கோணங்களில் இருந்து ஆராயப்பட்டன. வெளிநாட்டுத் தொழிலாளர்களைத் துரத்தும் போட்டியில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டிருக்கும் இக்கட்டான ஒரு சூழ்நிலைக்குள் பிரான்ஸ் சிக்குப்பட்டிருக்கும் வேளையில், மனிதாபிமான அடிப்படையில் அகதிகள் பிரச்சினைக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்ட விடயம் வரவேற்கத்தக்கதொன்று.

அரசாங்க ரீதியாக அகதிகள் பிரச்சனைகளைக் கவனிக்கும் அமைப்புக்களும், அரசாங்கத்திற்கு அப்பால் நின்று அகதிகள் புனர்வாழ்விற்கான ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டிருக்கும் பல அமைப்புகளும் பிரஸ்தாப நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆய்வுகளை நடத்தின,

இங்குள்ள அரசியல் கட்சிகளின் கவனத்தை அகதிகள் பிரச்சனையில் முழுமையாகத் திருப்புவதையும் அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்குச் சரியான பரிகாரம் ஒன்றைக் காணுவதற்குமாக25 அமைப்புகளினால் கையெழுத்திடப்பட்ட எட்டுக் கேள்விகளைக் கொண்ட கோவை ஒன்று சகல அரசியற் கட்சிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. கையெழுத்திட்ட அமைப்புகளுள் CIMADE, FRANCE TERRE D'ASILE, COMITIE MEDICAL POUR-LES EXILES, சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரெஞ்சுக் கிளை ஆகியனவும் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியின் ஓரங்கமாக நடைபெற்ற "எழுத்தாளர்களும் அகதிகளும்" என்ற புத்தக வெளியீட்டுக் கண்காட்சி பலரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அமைந்திருந்தது. இந்தக் கண்காட்சியிலே இங்கு வந்து அகதிகளாகிய எழுத்தாளர்கள் மற்றும் ஏனைய எழுத்தாளர்கள் அகதிப் பிரச்சனைகள் பற்றி எழுதிய புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன, இதில் குறிப்பிடத்தக்க அம்சம் புத்தகங்களை எழுதிய அத்தனை பேரும் சமூகமளித்து பார்வையாளர்களுக்கு விளக்கங்களை வழங்கினர்.

அண்மையில் ஈழமக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தால் பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்ட "LE GENOCIDE DES TAMOULS A SRILANKA" " (இலங்கைத் தமிழர் மீதான இனக் கொலை) புத்தகம் கண் காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. நூலாசிரியர் திரு ஜேன் மேரியா ஜுலியா கலந்துகொண்டார். ஈழமக்களின் பிரச்சனைகள் பலவற்றை உள்ளடக்கிய இந்த நூல் பலரது கவனத்தையும் ஈர்ந்தது. பார்வையாளர்கள் தொடுத்த கேள்விகளிற்கு திரு ஜுலியா அமைதியாகவும் ஆழமாகவும் பதில்களை வழங்கினர்.

பொம்பிது நிலையம் ஆற்றி வரும்தரமான கலை கலாச்சார சமூகப் பணிக்கு இந்த அகதிகள் தொடர்பான நிகழ்ச்சி மேலும் சான்று பகர்வதுபோல அமைந்தது.

*○*○*○*○*○*○*○*○*○*○*○*○*○*○*○*○*○*○*○*○

தோழர்களே!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெளியீடுகளைப் பெறுவதற்கும், மற்றும் அனைத்துத் தொடர்புகட்கும் தொடர்புகொள்ள வேண்டிய EPRLF ஃபிரான்சுக் கிளையின் முகவரி...

EPRLF (FRANCE BRANCH)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

தொலைபேசி: 48-74-98-30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்
# அந்திமகாலம் அண்மிக்கிறது

பூகோள மேற்பரப்பில் நடைபெறும் சம்பவங்கள் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டம் நெருங்கிவிட்டதை மாத்திரமல்ல முதலாளித்துவம்தனதனது அந்திம காலத்தை நெருங்கிவிட்டதற்கான சமிக்ஞைகளையும் காட்டத்தொடங்கிவிட்டன. மொத்த உலகினதும் முடிசூடா மன்னாகத் திகழ நினைத்து இன்று மூக்கறுபட்டு நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்குவாரங்களிலிருந்து தப்பும் முயற்சிகளில் முன்னெப்போதையும் விடத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தனது அழிவுக்கு முன்னர் மொத்த உலகையும் போர் அழிவுஒன்றுக்குள் உட்படுத்த அது துடிக்கிறது. அதனால் அது உலகின் ஒவ்வொரு மூலையிலும் போரைத் தூண்டிவிடத் தீவிரமாக முயல்கிறது. இதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது சொந்த மக்களின் சமூகநலச் செலவீடுகளை பாரிய அளவில் வெட்டி, பெருமளவு தொகை பணத்தை ஆயுத உற்பத்திக்கும், நவீன போர்முறை ஆராய்ச்சிக்கும் ஒதுக்கியுள்ளது. கொலைகாரக்கும்பலான றேகன் நிர்வாகத்தின் பயங்கரவாத நடவடிக்கைகளின் போதெல்லாம் தங்கள் கண்களை இதுவரை காலமும் இறுக்கமாக மூடி நின்ற பெரும்பான்மை அமெரிக்க மக்கள் இன்று கத்தி தங்கள் கழுத்துக்கே வந்துவிட்ட பின்னர்தான் தங்களை ஆளும் கொலைகாரக் கும்பலின் குணம்சங்களைப் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர்.

1987ம் ஆண்டுக்கான றேகனின் வரவுசெலவுத் திட்டத்தில் 143.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் துண்டு விழுந்தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை ஈடு செய்யும் வகையில் மக்களின் சமூகநலச் செலவீடுகளான கல்வி ஓய்வூதியம், சுகாதாரம் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளில் பாரிய வெட்டுக்களைச் செய்த றேகன் நிர்வாகம் தன்னுடையபாதுகாப்புச் செலவீடுகளில் அதாவது உலகை அச்சுறுத்தும் இராணுவ வல்லமையை தான் பெறவேண்டும் என்பதற்காக அச்செலவீடுகளை 1986ம் ஆண்டின் ஒதுக்கீட்டுத் தொகையை விட 12%ஆல் அதிகரித்துள்ளது. 1986ம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 316.6 மில்லியன் டொலர்கள். உள்நாட்டில் தனது மக்களின் சமூகநலச் செலவீடுகளை அதாவது தனதுநாட்டுப் பிள்ளைகளின் கல்விச் செலவீடுகளில் பாரிய வெட்டுக்களையும் ஏற்கெனவே எயிட்ஸ் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு சீரழிந்து செல்லும் அமெரிக்க மக்களின் சுகாதாரச்செலவுகளில் பாரிய வெட்டுக்களையும் மேற்கொண்டுள்ள றேகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகம் வெளிநாடுகளில் தனது கைப்பொம்மைகளின் ஆட்சிகளை நீடிக்கச் செய்வதற்கும், புரட்சிகர மற்றும் முற்போக்கு அரசுகளைக் கவிழ்க்கும் தனது கைக்கூலிகளுக்கும், எதிர்ப்புரட்சியாளர்களுக்கும் உதவுவதற்கான ஒதுக்கீடுகளில் பெரிய அளவிலான அதிகரிப்பை மேற்கொண்டுள்ளது.

நிக்கரகுவாவின் சான்டினிஸ்தியப் புரட்சியரசைக்கவிழ்க்க முயலும் தனது புனிதப் பணிக்கு இம்முறை 100 மில்லியன் டொலர்களையும், நவீன போர்க்கருவிகளையும் தர வேண்டும் என்று அமெரிக்கக் காங்கிரசைக் கேட்டுள்ள றேகன் அமரிக்க வீதிகளில் இருப்பதற்கு வீடில்லாமல், கடுங்குளிரில் தினமும் பத்தாய், நூறாய் விழுந்து சாகும் அமெரிக்கப் பிரசைகளைப்பற்றி காங்கிரசில் ஒரு சொல்கூடக் கூறவில்லை. ஆபிரிக்காவிலே ஒரு புரட்சிகரச் சமூகத்தை ஆக்கி முற்போக்குத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் அங்கோலாவின் முற்போக்கு அரசைக் கவிழ்க்க தென்னாபிரிக்க நிறவெறியரசுடன் சேர்ந்து எதிர்ப் புரட்சிச் சதிகளில் ஈடுபட்டு வரும் சுவாம்பிக்கு வாஷிங்டனில் பெருவரவேற்புக் கொடுத்து நிதியுதவியை நேரடியாகவேசெய்யத் தீர்மானித்திருக்கும் றேகன் அமெரிக்காவின் பிரதான நகரங்களில் கறுப்பு இன மக்களின் குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசி அவர்களைக் கொன்றொழிக்கும் தனது கூலிப்படைகளின்கொலை வெறியைப்பற்றி ஒரு சொல்லுக்கூட காங்கிரசில் சொல்லவில்லை.

இருந்தும் இத்தனை அட்டகாசங்களுக்கும் அமரிக்க ஏகாதிபத்தியத்தின் இத்தனை உலக ரீதியான அடாவாடித்தனங்களுக்கும் முடிவுகாலம் வந்துகொண்டிருக்கிறது. தன்னுடைய தலைவாசலில் கெயித்தி என்னும் சிறு தீவில் டுவாலியே எனப்படும் கொலைகாரக் குடும்பத்தின் 28 வருடகாலச் சர்வாதிகார ஆட்சியின் பிற் பலமாக இருந்த அமெரிக்க ஏகாதிபத்தியம்28 வருட காலங்களாக ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொலை செய்து, கெயித்தின் பொருளாதார வளங்களைச் சுரண்டிக் கொழுத்து 800மில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத்துக்களைத் தமக்குச் சொந்தமாக்கி கெயித்தி மக்களின் வருட வருமானம் 100 டொலர்களாகவும் உலகின் பிச்சைக்கார நாடுகளில் ஒன்றுக அந்த வளம் கொழிக்கும் தீவை மாற்றிய டுவாலியே குடும்பத்தின் அக்கிரமங்களுக்குப் பக்க பலமாக இதுவரை காலமும் இருந்துவந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் கெயித்தேயில் ஏற்பட்ட மக்கள் எழுச்சிக்கு முன்னல் நிற்க முடியவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையான டுவாலியேயை நாட்டைவிட்டு விரட்டும் பணியில் தானும் மக்களோடு இணைந்து தன்னை நல்லவனகக் காட்ட முயன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் முகங்குப்புற விழுந்துள்ளது. தற்போது

கியூபாவிலிருந்தும் நிக்கரகுவாவிலிருந்தும் வீசும் புரட்சிக்காற்று கெயித்தேயையும் சிவப்பாக்கி விடுமோ என்ற அச்சம் இன்னுமொரு கைப்பொம்மை அரசை கெயித்தியில் அமர்த்தும் பணியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தீவிரமாக ஈடுபடுத்தியுள்ளது.

கெயித்தியில் கிடைத்த மரணவலி ஆறமுன்னர் அடுத்த பேரடி பிலிப்பைன்சில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குக்கிடைத்துள்ளது. அமெரிக்கக் கைக்கூலியான மார்க்கோஸ் மேலும் ஒரு நாட் கூடப் பிலிப்பைன்சை ஆளமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். எதிர்க்கட்சி வேட்பாளரான திருமதி. அக்கினோ தேர்தலில் பெற்ற வெற்றியை சூழல்களினால் மறைத்து இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் தேர்தல் மோசடியை செய்து முடித்த மார்க்கோசின் அரசைப் பகிரங்கமாகக் கண்டிக்கத்துணிவற்ற றேகன் இருதரப்பிலும் தேர்தல் மோசடி நடந்துள்ளது எனக்கூறிய உரை றேகனின் ஜனநாயக முகமூடியைக் கிழித்தெறிந்துள்ளதுடன் பிலிப்பைன்சில் பாரிய அளவில் அமெரிக்க எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது. எங்கள் முதல் எதிரி அமெரிக்காவே என்ற சுலோகம் இன்று பிலிப்பைன்ஸ் முழுவதும் தாராளமாகவே காணப்படுகிறது. விரைவில் பிலிப்பைன்ஸ் புதிய மக்கள் இராணுவத்தின் (NPA) தலைமைக்குக் கீழ் வருவதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தளங்கள் நொருக்கப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் அங்கிருந்து விரட்டியடிக்கப்படப்போவதும் தவிர்க்க முடியாததாகிறது. அமெரிக்க காதிபத்தியத்திற்குக் கிடைக்கின்ற மரண அடிகள் இத்துடன் ஓயவில்லை. நிக்கரகுவாவின் சாண்டினிஸ்தியப் புரட்சிகர அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் உடனடியாக நிறுத்தவேண்டுமென்றும் கூலிப்படைகளுக்கு நிதியளிக்கக்கூடாது என்றும் நிக்கரகுவாவுடன் அமெரிக்கா நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்றும் கொன்ரடோரா நாடுகளின் கூட்டமைப்புக் கோரியுள்ளது. அதுமாத்திரமன்றி கொண்டுராசிலும், கொஸ்ராரிக்காவிலும் அமெரிக்கப்படைகள் நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கெதிராக அத்தேசங்களின் மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். எல்சல்வடோரில் FMLN தனது தாக்குதல்களைப் பாரிய அளவில் முடுக்கியுள்ளது. மேலும் அதிக பிரதேசங்களை FMLN தனது கட்டுப்பாட்டுக்குக்கீழ்க் கொண்டுவந்துள்ளது.

உலகளாவிய இந்த நெருக்குவாரங்கள் அமெரிக்கஏகாதிபத்தியத்திற்கு மாத்திரமல்ல அதனுடைய சகபாடிகளுக்கும் ஏற்பட்டு வருகின்றன. தன்னுடைய போதகனின் வழியைப் பின்பற்றி விமானக் கொள்ளையை – லிபியாவிலிருந்து புறப்பட்டுச் சிரியா நோக்கி வந்த விமானத்தைப் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்கள் – இருப்பார்கள். குறிப்பாக PFLP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் ஜோர்ஜ் கபாஷ் இருப்பார் எனக் கருதி வானத்தில் வழிமறித்து இறக்கிய இஸ்ரேல், விமானத்திலிருந்த சிறிய அதிகாரிகளைக் கண்டு ஏமாந்தது மாத்திரமல்ல சர்வதேச விதிகளை மீறிய இஸ்ரேலின் செயல் உலக நாடுகளின் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. அதேவேளையில் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன மண்ணின் பல பாகங்களிலிருந்தும் ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிரான கொரில்லாத் தாக்குதல்கள் தொடர்கின்றன.

றேகனின் விசிறியான மாக்கிரட் தட்சரின் ஆட்சிக் காலத்தின் இறுதி நாட்கள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன. பிரித்தானியாவின் பெரும்பான்மை மக்கள் வெஸ்ற்லான்ட் கெலிகொப்டர் உற்பத்தி நிறுவன விவகாரத்தில் தட்சரின் உண்மை கூறும் தன்மையைச் சந்தேகிக்கின்றனர். அது மாத்திரமல்ல பெரும்பான்மை மக்கள் தட்சர் தனது பதவிக் காலம் முடிய முன்னரே பதவி விலகிவிடவேண்டும் எனவும் விரும்புகின்றனர். கொன்சர் வேட்டிங்கட்சி யினுள்ளும் தட்சருக்கெதிராகப் பெருமெதிர்ப்புத் தோன்றியுள்ளது. தென்னாபிரிக்ககாவில் அமெரிக்க பிரித்தானிய ஆதரவான பொதாவின் நிறவெறி அரசு கறுப்பின மக்களின் தொடர்ந்த எழுச்சியால் மரணவலி கண்டுகொண்டிருக்கிறது. தொடரும் நெருக்குவாரங்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டலாவை விடுதலை செய்யும் பேரத்தில் இறங்க பொதாவின் அரசைத் தள்ளியுள்ளது.

போர்த்துக்கல்லில் முதலாளித்துவப் பத்திரிகைகளின் கணிப்பீடுகளையும் மீறி ஜனாதிபதியாக இடதுசாரி வேட்பாளரான சோவராஸ் வெற்றி பெற்றுள்ளார். இம்மாதம் நடக்கவிருக்கும் ஸ்பெயின் நேட்டோ கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதா இல்லையா என்பதற்கான சர்வசன வாக்கெடுப்பில் பெரும்பான்மை ஸ்பானிய மக்கள் நேட்டோவிலிருந்து ஸ்பெயின் வெளியேற வேண்டும் என்பதற்கு ஆதரவாகவே வாக்களிப்பார்களென அபிப்பிராயக் கணிப்பீடுகள் தெரியப்படுத்துகின்றன.




திரும்பும் திசையெல்லாம் தெரியும் முதலாளித்துவ நெருக்குவாரங்கள் அடுத்த நூற்றாண்டில் பூமிப்பந்தை புதிய பாதைக்கு இட்டுச் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிடல் காஸ்ட்ரோ பாப்பரசருக்கு அழைப்பு:
# தீவிர இடதுசாரித் தலைவரின் புரட்சிகர அணுகுமுறை

— ரி.ஆ. ஜெயம் டன்றொன்.

பல வருடகாலத் தீவிர போராட்டத்தின் பின் அமரிக்க ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்கச் செய்து பின் வாங்கவைத்த கியூபா அதன் புரட்சிகர வரலாற்றில் முதற் தடவையாக லத்தீன் அமரிக்க கிறீஸ்தவ கோயில்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாகப் பாப்பாண்டவரை தமது நாட்டுக்கு வருகை தரும்படி அழைப்பு விடுத்துள்ளது. கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோவின் இப்புதிய அணுகு முறை மேலைத்தேய அரசியல் வட்டாரங்களுக்கு பெரும் ஆச்சரியத்தை அளித்துள்ளன. போராட்ட வரலாற்றிலேயே முதற் தடவையாக கொறில்லா யுத்தப்பாணியை அறிமுகப்படுத்திய சேகுவாராவின் மரணத்திற்குப் பின் விடுதலைப் போராட்டத்தின் தலைமையை பிடல் கஸ்ரோ கையேற்றார். இவர்களின் நேர்மையான உறுதியான மக்கள் போராட்டத்தின் மூலம் அமெரிக்க வல்லரசு பின் வாங்கியதுடன் தோல்வியினைத் தழுவிக் கொண்டது. அமெரிக்காவிற்கு மிகமிக அண்மையிலிருக்கும் நாடான கியூபா ஓர் முழுமையான இடதுசாரி மாக்சிச நாடாக முன் நிற்பது அவர்களின் மன உறுதியையும் போராட்டத்தின் வலிமையையும் வெளிக்காட்டுகிறது.

பிடல் கஸ்ரோ இதுவரைக் காலமும் ரோமன் கத்தோலிக்க சபைகளுடன் கொண்டிருந்த பகைமை மனப்பான்மையைவிட்டுக்கொடுத்து அவரின் யதார்த்த பூர்வ அணுகு முறையின் சிறப்பை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. இதன் மூலம் பிடல் தனது "இமேஜ்" உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர்த்தி உள்ளதாக லன்டன் டைம்ஸ் பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது. அப் பத்திரிகை மேலும் தெரிவிக்கையில் இது எவருக்குமிடையான தகுதி அந்தஸ்திற்குரிய பிரச்சனை இல்லையெனவும் பாப்பரசர் கியூபாவிற்குச் செல்லும் பட்சத்தில் இருசாராரும் நல்ல பயனை அனுபவிப்பர் எனவும் தெரிவித்துள்ளது.

பிடல் கஸ்ரோவின் இவ் அழைப்பையொட்டி ரோமிலிருந்து இதுவரை எவ்வித கருத்தும் வெளியிடப்படவில்லை. இதிலிருந்து கஸ்ரோவின் இவ் அழைப்பு கத்தோலிக்க பீடத்திற்கு ஓர் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாக கருதவும் இடமுண்டு. இதன் மூலம் ரோமின் சில அண்மைக்கால சில அரசியல் தொடர்பான அணுகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகள் கட்டுப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இதேவேளை சில பத்திரிகைகள் கஸ்ரோவின் இவ் அணுகு முறை கியூபாவிற்கு பெரும் லாபத்தை ஈட்டிக்கொடுத்துள்ளதாகக் கூறி வருகின்றன. இன்னும் வேறு சில பத்திரிகைகள் கஸ்ரோவின் இந் நடவடிக்கை 'ஒரு கல்லில் பலவற்றை வீழுத்தும் செயலென வர்ணித்துள்ளன.

எது எப்படி இருப்பினும் ரோமன் கத்தோலிக்க மதத்திற்கு இதுவரை காலமும் கியூபாவின் ஆட்சியாளர் மட்டத்திலிருந்து வந்த கடுமையான போக்கு அகன்றது வரவேற்கக்கூடிய அம்சம் ஆகும். இதன் மூலம் ஓர் நேர்மையான கம்யூனிச மாக்ஸிச ஆட்சிக்கு கிறிஸ்தவ மதம் ஓர் இடைஞ்சலாகவும் அச்சுறுத்தலாகவும் இருக்கமாட்டாதென நிரூபணமாகியுள்ளது. இது பிடல் கஸ்ரோவினது 27 வருட கால முற்போக்குப் போராட்டத்தின் விளைவாகக் கண்ட பயன் என்றுதான் கூற வேண்டும்.

கியூபாவின் ஆயர் சங்கம் இது தொடர்பாக வெளியிட்ட 200 பக்கம் கொண்ட அறிக்கையொன்றில் அவர்கள் பிடலை மிகவும் பாராட்டியுள்ளனர். அவ் அறிக்கையில் ஆயர்களின் சங்கமும் பிடல் கஸ்ரோவுடன் ஒன்றிணைந்து நாட்டின் அடிப்படைக்குறிக்கோள்களை அடையப் பாடுபடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கியூபாவின் கத்தோலிக்க ஆயர்களின் இத் தீர்க்க தரிசனமான சிந்தனை பலரிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வறிக்கையிற் குறிப்பிடப்பட்டிருக்கும் வாசகங்களை அப்படியே கீழே தருகிறேன்.

"From the acceptance of the reality of the socialist revoution and a decession not to oppose socialist objectives, to agreement with the government on its basic social goals education, public helth, jobs and the meeting of basic needs."

இதன் மூலம் கியூபாவின் ஆயர்கள் இனி மேற்கொண்டு இடதுசாரி ஆட்சிமுறைக்கு எதிர்ப்பாளர்களாக இருக்க மாட்டார்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. 1960ம் ஆண்டுக்குப் பின் இம்முறை வானொலியில் முதற் தடவையாக "கரொல்" நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கப்பட்டது. நத்தார்த் தினங்களில் பல மத சார்பான உரைகள் இடம் பெற்றன.

பிடல் கஸ்ரோவின் இப் புதிய அணுகு முறை 'கியூபாவிற்கு மட்டுமல்ல சகல இடதுசாரி நாடுகளுக்கும் முன்மாதிரியான திருப்புமுனையாக அமைந்துள்ளது. கம்யூனிச சிந்தனையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை கால்மார்க்ஸ் கூட மதங்களுக்கு எதிராக ஒருபோதும் வரிந்து கட்டிக்கொண்டு நின்றதில்லை. அன்றைய நிலையில் கால் மார்க்சின் சிந்தனை மதத்தைப் போதையூட்டும் அபின் என வர்ணிக்க வைத்தது. அன்றைய காலகட்டத்தில் ஏன் இன்றைய கால கட்டத்திலும் எத்தனையோ பிற்போக்குச் சக்திகள் மத போதனைகள் என்ற போர்வையினுள் மறைந்து கொண்டு தமது திட்டத்தை செயற்படுத்தி வருகின்றன. இவற்றைப்பற்றி எழுதுவதென்றால் ஒரு பாரதச் சுருக்கமே எழுதிவிட்டுப் போகலாம். ஆனால்இதற்கு மிகவும் சுருக்கமான உதாரணமொன்றைச் சொல்வோமாகில் இலங்கையில் இன்றைய பிரச்சனைக்குரிய அடிப்படைக்காரணத்தை ஆராய்ந்தால் அங்கும் மதம் கலந்திருக்கிறது. "சிங்களபௌத்த நாடு" என்ற வெறி மூலம் பலர் போதையூட்டப்பட்டுள்ளனர். இங்கு ஒருசாரார் தமது நலனைப் பாதுகாக்க மத வெறியை ஆயுதமாகக் கைக்கொள்கின்றனர். இதற்கு மத பீடங்களும் துணை போய்க்கொண்டிருக்கின்றன. (இது எல்லா மதங்களுக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களிற் பொருந்தும்)

மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய எந்த ஒரு நல்ல நடவடிக்கையையும் மார்க்ஸ் எதிர்க்கவில்லை. இயன்றவரை மதபீடங்கள் வெறியூட்டாமல் இருக்கும்போதுதான் அது வரவேற்கப்படும்

கியூபாவின் இந்நடவடிக்கையை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகத்தான் கணிக்க வேண்டும். பாப்பரசர் இவ்வருட நடுப்பகுதியில் கொலம்பியாவிற்குச் செல்லும்போது கியூ பா செல்லலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த இரு பெரும் கொள்கைத் துருவங்களும் பொதுமக்களின் நலனிற்காகத் தனது நிலையை மாற்றும் அதே வேளை இலங்கை மக்களின் நலனில் வடக்குக் கிழக்குப் பகுதி ஆயர்களுக்கும் தென் பகுதி ஆயர் வண பிதா மார்க்கஸ் பெர்னாண்டோவிற்குமுரிய கருத்து வேறுபாடுகளையும் நடைமுறை வேறுபாடுகளையும் வாசகர்களுக்கு ஓர் கேள்விக்குறியாகவே விட விரும்புகிறேன்.

---

ஈ.பு மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் (EPIC)
தரும் ஈ.பூச் செய்திகளை தொலைபேசி மூலம்
அறிய தொடர்புகொள்ள வேண்டிய
தொலைபேசித் தொடர்பு இலக்கம்.....

48-74-60-43.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புரட்சியாளரை இனங்காண்போம்

பெரும்பான்மையான தேச விடுதலைப் போராட்டங்களில் ஏற்படும் சிக்கல் இன்று ஈழப் போராட்டத்திலும் ஏற்பட்டுள்ளது. போராட்டத்தின் கூர்மையை மழுங்கடிக்கும் வகையிலும், போராட்டத்தின் பாதையைத் திசை திருப்பும் வகையிலும், இயக்கங்களின் ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் வகையிலும் திட்டமிட்ட வகையில் பல்வேறு இயக்கங்களுக்கு இடையில் முதலாளித்துவ சக்திகளினதும், சுயநலமிகளினதும் ஊடுருவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த வரலாற்றுச் சிக்கலிலிருந்து இயக்கங்களை விடுவித்துச் சரியான போராட்டப்பாதைக்கு இயக்கங்களைக் கொண்டு வருவதற்கும், இயக்கங்கள் விடும் தவறுகளுக்கெதிராக மக்களைக் கிளர்ந்தெழச் செய்வதற்கும் சுதந்திரமான விமர்சனங்கள் இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாததாயிருக்கின்றன. போராட்டத்தின் மகத்தான சக்திகள் மக்களேயொழிய ஆயுதங்கள் அல்ல என்பதை இயக்கங்களுக்கு நினைவூட்ட இத்தகைய சுதந்திரமான விமர்சனங்களும் கருத்துக்களுமே பெரிதும் துணை புரிகின்றன.

ஆனால் இதைப் புரிந்து கொள்ளும் திறன் அற்றவர்களும், இயக்கங்கள் சரியான திசை வழியே நடந்தால் எங்கே ஈழம் கிடைத்து இன்றைய சுகபோக வாழ்வுகள் கலைந்து போய்விடுமே என்று கலங்கும் இயக்கங்களில் ஊடுருவி உள்ள சுயநலமிகளும் இந்த ஆரோக்கியமான விமர்சனங்களை கொச்சைப்படுத்துதலிலும் இவற்றைத் தவறான வகையிலே அர்த்தப்படுத்தி இயக்கங்களிடையேயும் மக்களிடையேயும் பிரிவுகளையும் பேதங்களையும் வளர்த்து அந்த நெருப்பில் தாம் குளிர் காய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

பொய்களையும் புரட்டுக்களையும் தங்குதடையின்றி வெகு தாராளமாகவே இறைத்து வரும் இந்தக் கும்பல்கள் தாங்கள் சார்ந்துள்ள இயக்கங்களின் நற்பெயர்களை முகமூடிகளாகப் பாவித்து வெளிநாடுகளில் சமூகவிரோதச் செயல்களில் பாரிய அளவில் ஈடுபட்டு தங்கள் சுய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளுகின்றன. இந்த விடயத்தில் கண் மூடி நிற்கும் பல இயக்கங்கள் தொடர்ச்சியாக நாம் சர்வதேச மக்களின் ஆதரவை இழந்து வருகின்ற அவல நிலை பற்றி இன்னும் சிந்திக்காமல் இருந்தால் அது முட்டாள்த்தனமானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் விடியலுக்குப் புரட்சிகர ஆயுதப்போரே இறுதி வழி என்பதைப் புரிந்துகொண்டு ஆக்கிரமிப்பு எதிரிக்கெதிராகக் களத்து மேட்டில் கருவி தாங்கி நிற்கும் அனைத்துப்போராளிகளினையும் நாம் மதிக்கிறோம். அவர்கள் உன்னதமானவர்கள். நாம் அவர்களின் கால் தூசிக்குக்கூட சமமற்றவர்கள் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்தேதும் இல்லை. ஆனால் போராளிகளை மதிக்கிறோம் என்பதற்காக சில இயக்கங்கள் செல்லும் தவறான பாதையை, நீள்பார்வையற்ற சிந்தனையை, வர்க்க நலனைப்பேண முயலும் நடவடிக்கைகளை நாம் பின்பற்ற வேண்டுமோ அல்லது நியாயப்படுத்த வேண்டுமோ அல்லது மௌனமாகவே அனுமதித்து மனதிற்குள் குமுற வேண்டுமோ என்றில்லை. எங்களுடைய கருத்துகளை நாம் சுதந்திரமாக வெளியிடும் உரிமை எமக்கில்லை என்றால் தவறுகளைத் தட்டிக் கேட்டும் தகமை எமக்கு இல்லை என்றால் பின்னர் நாம் எதற்காகச் சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும்? அல்லது எம்மை நாம் எப்படி சுதந்திரத்தை நேசிப்பவர்கள் என்று கூறிக்கொள்ள முடியும்.

உண்மையில் ஆரோக்கியமான விமர்சனங்களை இன்று நிராகரிப்பவர்கள் யார்? நிச்சயமாக ஈழப் போராளிகளல்ல. பெரும்பான்மையான ஈழப்போராளிகள் விமர்சனங்களை உன்னிப்பாக அவதானிக்கிறார்கள். தவறுகளைத் திருத்திக்கொள்ள முனைகிறார்கள். சக இயக்கப் போராளிகளுடன் ஐக்கியப்பட விளைகிறார்கள். துப்பாக்கிகளைப் பொது எதிரிக்கு மட்டுமே பிரயோகிக்க விரும்புகிறார்கள். ஆனால் இயக்கங்களினுள்ளே ஊடுருவியுள்ள முதலாளித்துவ சக்திகளும் வெளிநாடுகளிற் செயற்படும் சுயநலமிகள் கும்பலும் தமது நலன்களைக் காப்பாற்றுவதற்காக இயக்கங்களிடையே பிளவுகளை வளர்ப்பதுடன் மாத்திரம் ஓயாமல் விமர்சிப்பவர்களுக்கெதிராக வேட்டுக்களைத் தீர்க்கவும், விளக்குக் கம்பங்களைத் தேடவும் முனைகின்றனர்.

இந்த சுயநலமிகள் கூட்டத்தைத் தோலுரித்துக்காட்ட வேண்டியது வரலாற்றுக் கடமை. இயக்கங்களிடையே ஊடுருவியுள்ள முதலாளித்துவ சக்திகளினதும், சுயநலமிகள் கும்பலதும் முகமூடிகள் கிழிக்கப்படாவிட்டால் போராட்டப் பாதையில் நாம் காலடிகளைப் பின்னோக்கியே எடுத்து வைக்க நேரிடும். போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இதர இயக்கங்களை தோழமை இயக்கங்களாக நினைக்காமல் எதிரி இயக்கமாகக் கருதி அவ்வியக்கங்கள் பற்றி அவதூறுகளைப் பொழியும் தன்மை, போராட்டத்தில் ஏதோ மற்ற இயக்கங்கள் எல்லாம் ஆயுதங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு சார்மனைக் கதிரையில் சரிந்து விட்டது போலவும் தாம் சார்ந்திருக்கும் இயக்கம் மாத்திரம் தனித்து நின்று போராட்டத்தை முன்னெடுப்பதாக வெளிநாடுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்ப்பிரசாரத்தை மேற்கொள்ளும் கயமை, மாநுடத்தின் விடியலுக்கான மகத்தான தத்துவமான மார்க்சிசத்தின் தன்மையை அறியாமல் அதைக் கொச்சைப்படுத்தும் மடமை, ஆண்டாண்டுகாலமாக எந்தத் தலைமை வழிபாட்டால் எங்கள் இனம் துன்பப்பட்டதோ அந்தத் தலைமை வழிபாட்டுக்கு மீண்டும் வழிதிறக்கும் செயல் இவையெல்லாம் இந்த சுயநலமிகள் கூட்டத்தின் குளும்சங்கள். இவர்கள் தேசத்தின் மீது நேசம் கொண்டவர்கள் அல்ல. மாருகக் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்பவர்கள். தமதும், தம்மைச் சார்ந்தவர்களதும் வர்க்க நலன்களைப் பேணுவதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். பொது எதிரியை நோக்கித் திரும்ப வேண்டிய துப்பாக்கிகளை இன்று போராளிகள் தமக்குள்ளே திருப்பிக்கொள்ளும் அவல நிலைக்குத் தூபமிடுபவர்களும் இவர்களே. சத்தியத்தைக் கூறும் இயக்கங்களின் முகத்திரைகளை அணிந்து சமூகவிரோதச் செயல்களில் வெளிநாடுகளில் ஈடுபடுபவர்களும் இவர்களே. எதிர்த்துக் கேள்வி கேட்பவர்கள் மீது சண்டித்தனம், மக்களை விடத் தாம் மேலானவர்கள் என்ற எஜமானத்தனம். தறிகெட்ட பாதையில் நடக்கும் தான்தோன்றித் தனம் இவற்றைக்கொண்ட இந்தச் சுயநலமிகள் கூட்டம் ஆக்கிரமிப்பு எதிரியைவிடக் கொடியவர்கள். இவர்கள் கூட இருந்தே கொல்லும் தீராத நோய்கள்.

உதாரணமாக இன்று இயக்கங்களைச் சாட்டி இவர்கள் நிகழ்த்திவரும் போதை மருந்துக் கடத்தல் போன்ற சமூகவிரோத நடவடிக்கைகளால் ஈழவிடுதலை இயக்கங்களின் சர்வதேச ஆதரவு, சர்வதேச அந்தஸ்த்துப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஈழப்போராளிகள் மீது போதைவஸ்துக் கடத்தல்காரர்கள் என்ற பட்டம் சுமத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு ஈழப் பிரஜையும் சந்தேகக் கண்ணுேடு நோக்கப்படும் அவல நிலை. ஈழவிடுதலை இயக்கக் கிளைகள் தங்களது பிரச்சாரவேலைகளை சுதந்திரமாக நடத்தமுடியாத சூழ்நிலைபோன்ற பல இன்னல்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ச்சியாக இயக்கங்கள் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருத்தல் சரியா?

சுயநலமிகள் கூட்டத்தை இனங்கண்டுகொள்ளாமல் எதிர்ப்புரட்சிச் சதிகளைப் புரிந்துகொள்ளாமல் நடக்கும் இயக்கங்கள் புதைகுழிக்குள் விழுவது தவிர்க்கமுடியாது. ஈழத்தில் நீதியின் காவலர்களாய் நடந்துகொள்ளும் இயக்கங்கள் வெளிநாடுகளில் இந்தச் சமூகவிரோதிகளினதும், சுயநலமிகளினதும் விசமத்தனங்களுக்கு இடங்கொடுத்தல் சரியானதா? ஈழப்போராட்டத்தைப் பற்றி நிற்கும் ஒரு முக்கிய பிரச்சனையான இதைப்பற்றித் தொடர்ச்சியாக இயக்கங்கள் மௌனம் அனுஷ்டித்தால் இயக்கங்கள் மக்களிடமிருந்து பிரிந்து போவது தவிர்க்கமுடியாததாகும். அது மாத்திரமல்ல <u>இந்தச் சுயநலமிகளையும்</u>, <u>எதிர்ப்புரட்சியாளர்களையும்</u> தோலுரித்துக் காட்டி தண்டனை வழங்க மக்கள் புறப்படுவதும் தவிர்க்கமுடியாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## பிரான்சு:

### பிரான்சின் அரசியல் எதிர்காலம் .....?



மார்ச்-16 பாராளுமன்றத் தேர்தல்கள் நெருங்க நெருங்க பிரான்சின் அரசியல் எதிர்காலம் சிக்கலாகிக் கொண்டிருக்கின்றது. தேர்தல்களில் ஏற்கனவே ஊகித்தபடி வலது சாரி எதிர்க்கட்சிகள் அதிகளவு பெரும்பான்மையுடன் வெல்லுவது என்பது முடியாத காரியம் என்பதை சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் காட்டுகின்றன. ஜனாதிபதி மித்திரோனும், சோசலிசக் கட்சி உறுப்பினர்களும் வேகமாக முடுக்கிவிடப்பட்டுள்ள தேர்தல் பிரச்சாரங்களால் தொடர்ச்சியாக தன்னுடைய ஆதரவை அதிகரித்து வரும் சோசலிசக் கட்சி எதிர்க்கட்சித் தலைவர்கள் மூவரிடையேயும் (சிராக், ஜிஸ்கார்ட், பார்) ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளைப் பாவித்து தனது நிலையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. தேர்தல் முடிவுகள் எப்படியிருப்பினும் அதிகளவு வாக்குகளைப் பெற்ற தனிக்கட்சியாக சோசலிசக் கட்சி இருக்கப் போவது தவிர்க்கமுடியாதது. அதேவேளையில் அபிப்பிராய வாக்கெடுப்புக்களின் படி தன்னுடைய மக்கள் ஆதரவை தொடர்ச்சியாக அதிகரித்துவரும் ஜனாதிபதி மித்திரான் சமீபத்தில் தான் எழுதி வெளியிட்டுள்ள நூல் ஒன்றில் றேகனின் 'நட்சத்திரப் போர்' திட்டத்தை வன்மையாக கண்டித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரெஞ்சு விமானங்கள் சாட் மீது குண்டுவீச்சு!

முதலாளித்துவக் கைப்பொம்மை ஆட்சியாளரான சாட் நாட்டின் ஹிசைன் ஹப்ரேயின் ஆட்சியைப் பாதுகாக்கும் வகையில் மேற்படி ஆட்சிக்கெதிரான லிபிய ஆதரவுக் கிளர்ச்சிப் படைகளின் தளங்களை பிரெஞ்சுப் போர்விமானங்கள் குண்டு வீசித் தகர்த்துள்ளன. இதையடுத்து 1000க்கும் மேற்பட்ட கிளர்ச்சிப் படைகளைத் தனது படைகள் கைதுசெய்துள்ளதாக ஹப்ரேயும் அறிவித்துள்ளார். எதிர்வரும் தேர்தல்களில் சோஷலிசக் கட்சி கூடுதலான ஆதரவை பெறுவதற்காக நிகழ்த்தப் பட்டதாகக் கருதப்படும் இக்குண்டுவீச்சுத் தாக்குதலை அமெரிக்க ஏகாதிபத்தியமும், பிரான்சின் வலதுசாரிக் கட்சிகளும் வரவேற்றுள்ளன. சோவியத் யூனியன், லிபியா, மற்றும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இத்தாக்குதல் குறித்து பிரெஞ்சு அரசை வன்மையாகக் கண்டித்துள்ளன.

## டுவலியே விவகாரம் பிரெஞ்சு-அமெரிக்க உறவில் விரிசல்.

தனது நீண்டகால கொடிய ஆட்சியினால் ஹெய்த்தே மக்களைச் சுரண்டி தான் கொழுத்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையான டுவாலியேயின் ஆட்சிக்கெதிராக ஏற்பட்ட மக்கள் எழுச்சி டுவாலியேயை நாட்டைவிட்டு விரட்டியது. டுவாலியேயும், அவனது குடும்பத்தினரும் ஹெய்த்தே மக்களிடம் சுரண்டிய பெருந்தொகை பணத்தையும் கொண்டு நாட்டைவிட்டு வெளியேற வழிசெய்த அமெரிக்க ஏகாதிபத்தியம் தற்காலிகமாக ஒரு வாரத்திற்கு அவர்களை பிரான்சில் தங்க அனுமதிக்குமாறும் பின்னர் தான் அவர்களை ஏற்றுக் கொள்வதாகவும் பிரெஞ்சு அரசைக் கேட்க பிரெஞ்சு அரசும் அனுமதித்தது. ஆனால் ஒருவாரம் கடந்தும் அமெரிக்கா டுவலியே குடும்பத்தை மீள அழைக்க மறுப்பதனால் இரு அரசுகளின் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. தங்கட்கு அரசியல் அடைக்கலம் தரவேண்டும் என்ற டுவாலியேயின் விண்ணப்பத்தையும் பிரெஞ்சு அரசு நிராகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப்பைன்சு:

## பிலிப்பைன்சில் மார்க்கோஸ் ஆட்சி கவிழ்ந்தது.
## புதிய ஜனாதிபதி திருமதி அக்கினோ.




அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையும் சர்வாதிகாரியின் சகபாடியுமான பிலிப்பைன்சின் அடக்குமுறையாளன் மார்க்கோசின் 20வருட கொடிய ஆட்சி இறுதியாக மக்களின் எழுச்சி மிகு போராட்டங்களால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மார்க்கோசின் தேர்தல் தில்லுமுல்லுகளையும் மீறி திருமதி அக்கினோ பிலிப்பைன்சின் ஜனாதிபதியாக பிலிப்பைன்சு மக்களாலும், உலகநாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார். மார்க்கோசின் பாதுகாப்பமைச்சரும், உதவி இராணுவத் தளபதியும் பதவி விலகி திருமதி அக்கினோவுடன் சேர்ந்ததையடுத்தே திடீர் திருப்பங்கள் ஏற்பட்டு வழமை போல அமெரிக்கத் துணையுடன் மார்க்கோஸ் தனது குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. பிலிப்பைன்ஸ் மக்களுக்கு சொந்தமான பெருந்தொகையான பணத்தையும் மார்க்கோஸ் தன்னுடன் எடுத்துச் சென்றுள்ளான்.



மார்க்கோசை விரட்டுவதற்கு பிலிப்பைன்சின் புதிய மக்கள் இராணுவம் ஒழுங்கு செய்த வீதிப்போராட்டங்களை பெரிதும் துணைசெய்தது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது கைப்பொம்மை ஆட்சியாளருக்கு அரசியல் புகலிடம் அளிக்கப் போவதாக அறிவித்ததையடுத்து மார்க்கோஸ் தனது சகபாடிகளுடன் ஹவாய் தீவுகளுக்குச் சென்றுள்ளான். அதேவேளையில் ஒடுக்கப்பட்ட பிலிப்பைன்சு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான புதிய மக்கள் இராணுவத்தின் எழுச்சியைத் தடைசெய்யும் வகையில் புதிய பிலிப்பைன்ஸ் அரசுக்கு அதிகளவு இராணுவ உதவியை வழங்கப் போவதாக ரேகன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோவியத் யூனியன்:

### சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரஸ்.



'சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27வது காங்கிரசானது சோவியத் யூனியனையும், அதைச் சார்ந்த உலகினையும் வாழ்க்கைப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாகும் வகையில் கூடியுள்ளது' என மேற்படி காங்கிரசை ஆரம்பித்து உரையாற்றிய சோவியத் தலைவர் தோழர் கோர்பச்சேவ் குறிப்பிட்டுள்ளார். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 5,000 பிரதிநிதிகளும், 152 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இக்காங்கிரசில் தோழர் கோர்பச்சேவ் தமதுரையின் போது 2000ம் ஆண்டுக்கிடையில் அனைத்து நியூக்கிளியர் ஆயுதங்களையும் நிர்மூலமாக்க வேண்டும் என்ற தமது கோரிக்கையை வலியுறுத்தினார். 1970–1980 இடைப்பகுதி பிரஷ்னேவின் ஆட்சிக்காலத்தைக் கண்டித்த அவர் இக்கால கட்டமே நாட்டில் ஊழல்கள் நிகழவும், பொருளாதாரம் பின்னடையக் காரணமாக இருந்தது எனவும் கூறினார். சோவியத் பொருளாதாரம் துரித வளர்ச்சி பெற சோவியத் மக்கள் புத்தாக்கத்துடன் தொழில்களில் ஈடுபட வேண்டுமெனக் கோரியதுடன் புதிய ஐந்தாண்டுத் திட்ட விபரத்தையும் அறிமுகப்படுத்தி வைத்தார். தொடர்ச்சியாக சர்வதேச ஆதிக்கத்தின் மையமாக அமெரிக்காவே திகழ்கிறது எனக் கூறிய தோழர் கோர்பச்சேவ் ஆப்கானிஸ்தானின் அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்புரட்சியாளர்களுக்கான வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்படுவதற்கான உறுதி அளிக்கப்பட்டால் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள சோவியத் துருப்புக்களை வெளியேற்றுவதற்கான கால அட்டவணையை சோவியத் யூனியன் அறிவிக்கும் என்றும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா:

### இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகட்குத் தீர்வு காண இந்தியா கோரிக்கை.

சிறீலங்கா அரசின் பொய் வேதாந்தங்களைப் புரிந்து கொண்ட இந்திய அரசு இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகட்கு ஒரு மாதத்திற்குள் அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறியுள்ளது. இக் காலப்பகுதியில் சிறீலங்கா இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களில் படுகொலைகளைப் புரியாமல் தனது முகாம்களுக்குள் இருக்க வேண்டும் என்றும் இந்திய அரசு கோரியுள்ளது. இது தொடர்பான உரை இந்தியப் பாராளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சர் பகத்தால் நிகழ்த்தப்பட்டது. இவ்வுரைக்குப் பதிலளித்த சிறீலங்கா அரசு இந்திய அரசின் இச்செயல் இலங்கை நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவது என்றும் இந்தியாவிலும் பல இடங்களில் மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன என்றும் தெரிவித்ததுடன் இரு நாடுகளினதும் உறவில் முன்னெப்போதுமில்லாத விரிசல் ஏற்பட்டுள்ளது.

### சிறீலங்காவின் சுற்றுமாற்றுத் தந்திரம் நீடித்தால் பொறுமையை இந்தியா இழக்க நேரிடும்.

'சிறீலங்கா அரசு தனது சுற்றுமாற்றுத் தந்திரத்தை கைவிடாதபட்சத்தில் இந்தியா தனது பொறுமையை இழக்கும் நிலைமை ஏற்படும். போர் நிறுத்தம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படாத நிலையிலும் அர்த்தமற்ற முறையில் அப்பாவிமக்கள் ஆயுதப்படையினரால் கொல்லப்படுகின்ற போதிலும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது அசாத்தியம்' [illegible] இந்திய வெளியுறவுச் செயலர் ரொமேஷ் பண்டாரி, சிறீலங்கா தூதுவர் தின்கரட்ணவுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து 'இந்து' வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ சுவீடன் நாட்டின் பிரதமர் திரு. ஒலோவ் பாம் இனந்தெரியாத நபர் ஒருவரால் வீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

★ இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கும் பாலஸ்தீனத்தின் மேற்குக்கரையின் நப்லஸ் பகுதியின் இஸ்ரேலினால் நியமிக்கப்பட்ட கைக்கூலி மேயர் ஸபர் அல் மஸ்ரி பாலஸ்தீனப் போராளிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

★ தென்னாபிரிக்க நிறவெறி அரசு நிகழ்த்திவரும் படுகொலைகளுக்கும், நீதியற்ற கைதுகளுக்கும் எதிராக 13,500 க்கும் மேற்பட்ட கறுப்பின சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

★ இந்திய அரசின் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள், எதிர்க்கட்சிகள் இணைந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட மாபெரும் எதிர்ப்பு ஊர்வலத்தை மேற்கொண்டனர்.

☆ இலத்தீன் அமெரிக்காவிலுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியரசுகளைக் கொண்ட நாடுகளாகிய எல்சல்வடோர், கொளதமாலா, மெக்சிக்கோ, ஹொண்டுராஸ் ஆகியவற்றில் மனித உரிமை மீறல்கள் பாரிய அளவில் நடைபெறுவதாக சர்வதேச மனித உரிமைகள் சங்கம் அறிக்கையுடன் குற்றம்சாட்டியுள்ளது.

☆ மற்றுமொரு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையான தென்கொரியாவின் அடக்குமுறை ஆட்சியாளன் சுன் டு ஹுவான் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 270 பேரை வீட்டுக்காவலுக்குள்ளாக்கியுள்ளான்.

☆ தென்னாபிரிக்காவின் அலெக்ஸாண்ட்ரா நகரில் கறுப்பின மக்களுக்கெதிராக நிறவெறியரசின் காவல்படைகள் நிகழ்த்திய வெறியாட்டத்தில் 80க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகா தர்மமா? பயங்கரவாதமா?

முதலாளித்துவ செய்தித் தொடர்புச் சாதனங்கள் அரசபயங்கரவாதத்திற்கு எவ்விதம் துணை புரிகின்றன என்பதற்கு THE GURDIAN WEEKLY சிறந்த ஒரு உதாரணமாகும். உலகின் கணிசமான வாசகர் கூட்டத்தைக் கொண்டிருக்கும் இந்தப் பத்திரிகை மிகவும் நுணுக்கமான விதத்தில் தனது ... வித்தைகளை அவிழ்த்துக் கொண்டிருக்கிறது. வாசிங்டன் போஸ்ட் கம்பனியின் நிர்வாகத் தலைவரான திருமதி கிருகாம் 1985ம் ஆண்டு "பயங்கரவாதம் தொடர்பான செய்கிச் சேகரிப்பில் பத்திரிகைத் தொடர்புச்சாதனங்களின் பொறுப்புக்கள்" என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையின் சில பகுதிகள் அண்மையில் பிரஸ்தாப பத்திரிகையில் மறு பிரசுரம் செய்யப்பட்டிருந்தன. இந்த உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் சில முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கும் அரசபயங்கரவாதத்திற்கும் உள்ள தொடர்புகளை நமக்குத் தொட்டுக் காட்டுகின்றன.

எந்தவிதமான தலையீடுகளுக்கும் அடிமைப்படாமலிருக்கும் போது தான் சரியான வகையில் பத்திரிகா தர்மம் கட்டிக்காக்கப்படும். ஆனால், இந்த நிலைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடக்கூடிய பத்திரிகைகளைக் கண்டுகொள்வது தற்போது அரிது. ஏதோ ஒரு பிற்போக்குத் தளையில் சிக்குண்டே தற்போது பத்திரிகா தர்மம் உள்ளது. இதனால், அடக்கப்பட்டுக்கொட்டிருப்போரின் குரல் வளைகள் நாளுக்குநாள் நெருக்குப்பட்டுக்கொண்டேயுள்ளன.

"பயங்கரவாதம் தொடர்பான செய்திகள் கிடைத்ததும் வாசிங்டன் போஸ்ட் கம்பனி நடந்துகொள்ளும் விதத்தைத் திருமதி கிருகாம் பின்வருமாறு சொல்கின்றார். "எங்களிற்கு ஒரு பரபரப்பான செய்தி கிடைத்ததும், நாங்கள் அறிந்துகொண்டதையும், வெளியிடத் திட்டம் அமைந்துள்ளதைப் பற்றியும் அதிகாரபீடத்தில் உள்ளவர்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்"

வாசிங்டன் போஸ்டின் இந்த நிலைப்பாடு, அதனது நெருக்கமான அரசியல்த் தொடர்புகளைச் சுட்டிக்காட்டுகின்றது. அதிகார பீடத்தில் உள்ளவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் சரியான முறையில் பத்திரிகா தர்மம் காப்பாற்றப்படும் என எதிர்பார்க்கமுடியாது. எந்தவிதமான தலையீடுமின்றி பத்திரிகை என்ற மாபெரும் சக்தி தானே ஒரு முடிவை எடுக்கவேண்டும். முதலாளித்துவ தொடர்புச் சாதனங்களிடம் நாம் இதனை எதிர்பார்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக; இலங்கையில் நடைபெற்ற 83யூலைப் படுகொலைகளுக்குக் காரணமானது எனச் சொல்லப்படும் 13 இராணுவச் சிப்பாய்களின் படுகொலை தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் அறிவுறுத்தல்கள் ., பத்திரிகைத் தொடர்புச் சாதனங்களால் செவிமடுக்கப்பட்டமையாலேயே இனக்கொலை உலகை உலுப்பும் அளவிற்கு உயர்ந்தது என்பது நேர்மையான கணிப்பீடாகும். அந்தக் காலகட்டத்தில் பத்திரிகைகள் மட்டும் "சுதந்திர"மாக இயங்கி இருந்தால் இன அழிவின் விகிதம் குறைந்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

விமானக் கடத்தல்கள் போன்றவற்றை பயங்கரவாதம் எனச் சுட்டிக்காட்டும் திருமதி கிறுகாம் இத்தகைய பயங்கரவாதச் செயல்களைப் பத்திரிகைகள் வெளியிடுவதன் மூலம், பயங்கரவாதிகள் தம்மை வெளியே பிரபல்யப்படுத்திக்கொள்கின்றார்கள். செய்தித் தொடர்புச் சாதனங்கள் "பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை மூடி மறைக்க வேண்டுமென்பதைத் தனது உரையில் ஒழிவுமறைவில்லாமல் சொல்லியுள்ளார்.

இங்கே பயங்கரவாதிகள் என்ற பதத்திற்கு சரியான ஒரு வரைவிலக்கணத்தைக் காணவேண்டியுள்ளது. அரச பயங்கரவாதிகளினால் சுட்டிக் காட்டப்படும் பயங்கரவாதிகளின் உண்மையான நிலைப்பாடு என்ன? இவர்களாற் செய்யப்படும் நடவடிக்கைகள் பயங்கரவாதமா? இவர்களது இயக்கப்பாடுகளிற்கான அடிப்படைக் காரணம் என்ன? இவர்களின் செயல்களை ஆதரிப்பதற்கான நியாயங்கள் எவை? என்பது தொடர்பான சிக்கல் அறுபடும்போது அங்கே உண்மையான பயங்கரவாதிகளை அடையாளம் காணலாம்.

பத்திரிகைத் தொடர்புச் சாதனங்களால் தம்மைப் பிரபலப்படுத்த விமானக் கடத்தல்களில் விடுதலைப் போராளிகள் இறங்குவதில்லை. விமானங்களைக் கடத்துவது வெடிகுண்டுகளை வைப்பது பொது மக்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது உண்மைதான், இதேவேளை பயங்கரவாதிகள் என்று குற்றஞ்சாட்டப்படும் அவர்களது இந்த நடவடிக்கைகளை நியாயிக்கச் சான்றுகள் உண்டு.

அரச பயங்கரவாதத்தின் கூற்றுக்கள் அத்துமீறிப் போகும் போது நியாய அடிப்படைகளின், நிர்ப்பந்தங்களின் உதைப்பில் தனி நபர் பயங்கரவாதம் உருவாகுவது தவிர்க்கமுடியாது. இந்தப் பயங்கரவாதத்தினால் ஏற்படும் சின்ன அழிவுகளையும் பெரிதுபடுத்தி அரச பயங்கரவாதத்தின் அட்டகாசங்களை இருட்டடிப்புச் செய்வது பத்திரிகா தர்மத்திற்கு உட்பட்ட ஒன்றல்ல.

வாசிங்டன் போஸ்ட் தலைவரின் நியாயங்கள், சமகால பத்திரிகைச் செய்தித் தொடர்புச் சாதனங்கள் பலவற்றின் பயங்கரவாதப் போக்கைத் தொட்டுக் காட்டுகின்றன.

.......-----......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை விமர்சனம்

# சங்கே முழங்கில் புரட்சிப்படைப்புக்கள்
# பலவித கோணங்களில் கலா தரிசனம்!

ஈழத்திலே மரபு வழியோக வந்த கலைகள் பேணிக்காக் கப்படுவதும் புதிய கலைகள் தோன்றுவதற்கு ஊக்கியாக இருத்தலும் எந்த கலாச்சார வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவை. இதனை ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் பிரெஞ்சுக் கிளை திட்டமிட்ட முறையில் செய்து வருகின்றது. கடந்த மாதம் 10ம் திகதி பரிசில் நான்காவது தடவையாக "சங்கே முழங்கு" நடைபெற்ற போது அதில் பல வித்தியாசமான சுவைகளை அனுபவிக்க முடிந்தது. குறிப்பாக சங்கே முழங்கு தொடர் நிகழ்ச்சியினது வளர்ச்சியினது பல நிலைகள் அங்கு மேடையேறிய நிகழ்ச்சிகளின் மூலம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டன. ஒரு மெல்லிய விமர்சனம் கலந்த சுவைக்குறிப்புக்களுடன் இந் நிகழ்ச்சிகளை அலசிப் பார்த்தல் பயனுடையதாய் இருக்கும்.

## நடனம்

"சங்கே முழங்கில் முதற்தடவையாக நடனமாடிய ஆண் மகன் என்ற பெருமை திரு தயாளசிங்கத்தைச் சேருகின்றது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் பரதம் சொந்தமானதென்பதை இந்தியாவில் பல ஆண்கள் நிரூபித்துள்ளனர். ஈழத்து நடனத்துறையில் அதை நிரூபித்தோரில் தயாளசிங்கமும் ஒருவர். இவர் ஆடிய நடனம் பலரையும் களிப்படைய வைத்தது. மிகவும் எளிமையான முறையில் பதித்த நடன முத்திரைகளின் மூலம் அவரது ஆற்றல் வெளிக்கொணரப்பட்டது. இசையோடு இசையாக அவர் புலன்கள் இணைய மிகைப்படுத்தப்படாத அளவுப்பிரமாண ங்களுக்கொப்ப உடல் அபிநயிக்க அங்கே பரதக்கலையின் சாகசச் சிறப்புக்கள் வெளிப்பட்டன. திரு தயாளசிங்கத்தின் மாணவியர் ஆடிய நடனங்களில் வளரும் ஒரு திறமை புலப்பட்டது. நடனக் கலை ஒரு எல்லைக்குள் நிற்கக்கூடாது. ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கும் ஆன்மீகக் கீர்த்தனங்களுடன் நின்றுவிடாமல் இலக்கண மரபுடன் ஒன்றிய, புதிய புரட்சிக் கீர்த்தனங்களில் தடத்தில் நடனத்தேரை ஓட்டிப் பார்க்கும் பரிசோதனைகளை நடத்த வேண்டிய பொறுப்பு திரு தயாளசிங்கம் போன்றோரைச் சார்ந்ததாகும்.

## யதார்த்தங்களைக் காட்டிய கவிஞர்கள்.

ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் ஆதரவுக் கவிஞர்களால் நடத்தப்பட்ட கவியரங்கு பல கோணங்களிலும் வைத்து விமர்சிக்க தக்கதொன்று. ஏதோ ஒரு வகையில் எமக்கு அன்னியமாகிவிட்ட நிலத்தில் இக் கவியரங்கு நடந்திருக்கின்றது. ஆனால், கவியரங்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் எந்தவகையிலும் அன்நியமாகவில்லை. ஈழத்தில் பார்த்த இ வியரங்குகளிற் காண முடியாத பல சிறப்பு அம்சங்கள் இங்கு வெளிப்பட்டன. கவிஞர், சிங்கத்தின் தலைமையில் கவிஞர்கள் செல்வம் அருளானந்தராசா , உமாகாந்தன் காசிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். பாடப்பட்ட கவிதைகளில் சமூகத்தின் சகல விதமான அடக்குமுறைகளுக்கும் எதிரான குரல்கள் உரத்து ஓங்கி ஒலித்தன. ஈழத்துக்கு அப்பால் வாழும் தமிழ் பேசும் மக்களின் "இயலாமை" ஈழத்தில் வாழ்வோரின் துயரங்கள் பெண் அடிமைத்தனம் ஆகியன சுட்டிக்காட்டப்பட்டன. பாடப்பட்ட கவிதைகள் மரபு சார்ந்தும் மரபு சாராமலும் அமைந்தன. மொத்தத்தில் அவை யாவும் கவிதைகளே. கவிதை என்ற பெயரில் வெறும் ... சீனாற் சரடுகள் அங்கே கொட்டப்படவில்லை. கவிதை வரிகளிலும் அவற்றை உச்சரித்த தொனியிலும் உயிர்த்துடிப்பு இருந்தது. இத்தனைக்கும் மேலாக உண்மை கண் விழித்திருந்தது.

இதே வேளையில் கவிஞர்கள் ஒரு போர்முலாவின் பிடியிலிருந்து தப்பாத தன்மை தெரிந்தது. கவிதை வரிகளைப் பல தடவை பாடுவது ஈழத்திலும், இந்தியாவிலும் ஒரு போர்முலாவாக இருந்து வருகிறது. இந்தப் போர்முலா முழுக்கமுழுக்கத் தப்பானது என்று சொல்ல முடியாது பிரமானம் பிழன்று இது பாவிக்கப்படும்போது ரசிகருக்கும் கவிஞனுக்குமிடையில் இது ஒரு இடைவெளியைச் சிலவேளை ஏற்படுத்தி விடும். கண்மூடித்தனமாக எங்கள் எங்கள் இலக்கிய மூதாதையர்களால் பின்பற்றப்பட்ட போர்முலாக்களைப் பற்றி மீள் விமர்சனம் செய்ய வேண்டிய எமது கலைகளைச் செழுமைப்படுத்த அவசியமானதொன்றாகும்.

நாதம் சுரந்த வயலின்.

ஈழத்திலே வயலின் இசைக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. இசைக் கச்சேரிகளில் உப வாத்தியமாக மட்டும் அல்லாது தனி வாத்தியக் கச்சேரியாக இது பெரும் புகழ் பெற்றிருக்கின்றது. சங்கே முழங்கில் ஒலித்த வயலின் இசை பலரையும் மெய் மறக்க செய்தது. எங்கள் காதுகளிற்குப் பழக்கமான சில பாடல்களை திரு ராஜா அவர்கள் வயலினில் மீட்டியபோது எங்கள் நிலம் எங்களுக்கு அழைப்பு விடுவதுபோல் இருந்தது. அகதித் தரையில் வாழ்ந்துகொண்டு இசைப் பயிற்சிகள் செய்து இனியதொரு விருந்தை வழங்குவது சாதனைக்குரியதொன்றே.

சிந்திக்க வைத்த வியாபகம்.

மூன்றாவது சங்கே முழங்கில் பரிணமத்தை வழங்கிய அருந்ததி இம்முறை வியாபகத்தைத் தந்தார் இது ஒரு ஓரங்க நாடகமாகும். மிகக்குறைந்த அளவு கலைஞர்களுடன் மேடையேற்றப்பட்ட இந்நாடகம் அபிநய உத்திகள் கொண்டு மெருகூட்டப்பட்டிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. ஈழத்தில் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் நானு? நீயா? போராட்டத்தின் பிரதிபலிப்புக்களை வியாபகத்தில் தரிசிக்க முடிந்த அதே வேளையில், பல்வேறு விதமான அரசியல் கருத்துக் களினால் மக்கள் என்ற மாபெரும் சக்தி குழம்புண்டு கிடக்கும் கொடுமை அச்சொட்டாகக் கோடிட்டுக் காட்டப்பட்டது. நாடகத்தை நகர்த்த கதாசிரியர் கையாண்ட உத்தி மிகவும் எளிமையானது விறுவிறுப்பானது ரசனைக்குரியது. பாத்திரங்களின் படைப்பில் செலுத்தப்பட்டிருக்கும் கவனத்திற்கு உதாரணமாக இங்கே ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம். எதிரியாக நடிக்கும் பாத்திரம் ஒரு தடவை கூட தனது வாயைத் திறக்கவில்லை. ஆனால் பார்வையாளர்களின் மனதில் அது ஒரு கருத்தில் குறியீடாய்ப் பதிந்து விடுகின்றது. இத்தகைய பாத்திரச் சிருஷ்டிப்பு வான்முனையில் நடப்பதை ஒத்ததாகும்.

இதே வேளையில் நாடகத்தின் தொடக்கம் முடிவு என்பன கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டியன. வரலாறு என்ற ஒரு பாத்திரம் நாடகத்தை நகர்த்துகின்றது. தொடக்கத்திலிருந்து முடிவு வரை எங்கள் அரசியல் வரலாறு கணீரென்ற குரலில் இப் பாத்திரத்தின் மூலம் வைக்கப்படுகின்றது. வரலாறு என்ற உண்மையிடம் நாம் தப் முடியாது. வரலாறுகளைப் படிப்பதன் மூலம், வரலாற்றின் மீது எமது புலன்களை ஆழமாகப் பதிப்பதன் மூலம் எம்மால் எதிர்காலத்திற்கான சரியான பாதைகளைத் தெரிவு செய்ய முடியும். என்பதை இந்தப் பாத்திரம் ஊடாக வெளிப்படுகிறது. முடிவில் எமது விடுதலையில் அடிப்படைத் தேவையான ஐக்கியம் வலியுறுத்தப்படுகின்றது. கருத்துரீதியாக நாம் ஐக்கியப்படும் போது எமது மாபெரும் இலட்சியத்தை அடையமுடியும். என்ற உண்மை புகட்டப்படுகிறது.

நாடகத்தில் நடித்த அத்தனை கலைஞர்களும் சிறப்பாகத் தமது பாத்திரப் பண்புகளை வெளிக்கொணர்ந்து வியாபகத்தை ஒரு உயிர்ப்படைப்பாக்கி உலவவிட்டார்கள்.

இசையில் ஈழத்துப் பாடல்கள்.

வழங்கப்பட்ட இசைப்பாடல்கள் நிகழ்ச்சியை மோசம் எனச் சொல்லிவிட முடியாது. கடந்த முறைகளிலும் பார்க்கப் பல முன்றேற்றங்கள் காணப்பட்டன. இதேவேளையில் பல கருவிகளைப் பயன்படுத்தி இசை விருந்து வழங்கும் போது தொழில்நுட்பக் காரணங்கள் இசை முறிவிற்கு வித்திடுகின்றமை புலப்படுகின்றன. வாத்தியங்களைத் தொடுப்பவர்கள் இசையனுபவம் மிக்கவர்கள். பாடுபவர்கள் நல்ல குரல் வளம் படைத்தவர்கள். இவர்களிடம் ஆற்றல் நிறைய உண்டு என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், இவர்களது ஆற்றல் ஒரு திட்டமிட்ட முறையில் ஒழுங்குபடுத்தப்படாத குறையை பல வழிகளாலும் அவதானிக்க முடிகிறது. ஈழத்து இசைத்துறையைப் பொறுத்தவரை பல தசாப்தங்களாக இந்த அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதானிப்பு இருந்து வருகின்றது. இந்தியப் பாடல்களை மட்டுந் தான் எமது மக்கள் ரசிப்பார்கள் என்ற நிலையைத் தளர்த்தி எமது மக்களின் ரசனைக்குத் தீனியாக அமையும் ஈழத்துக் பாடல்களைத் தயாரிக்கும் கடுமையான உழைப்புக்கு எமது கலைஞர்கள் தயாராக வேண்டும். இம்முறை வழங்கப்பட்ட நிகழ்ச்சியில் வீர உணர்வைத் தூண்டும் புரட்சிகரப் பாடல்கள் ஒலித்தமை வரவேற்கத் தக்கன. எமது மக்களிடையே இருக்கும் ஒருவித ரசிப்பு மாயையை உடைக்கும் பணியில் கைற்ரேன் கடுமையாக ஈடுபட்டு உழைத்தல் வரவேற்கத் தக்கது.

மொத்தத்தில் பார்க்கும் போது எமது கலைஞர்களின் ஆற்றல்கள் வளர்ந்து வருவது புலனாகின்றது. இந்த ஆற்றல்களை மேலும் வளர்த்தெடுக்க "சங்கே முழங்கு" ஒரு பாரிய களமாக் இருந்து வரும் என்பதில் சந்தேகமே இல்லை.

## பொறுக்கள் பூமி.....?

நாளை என்குதேசர் இயக்கம் - அதை
நலிந்தவர் படைகொண்டு நடத்துதல் வழக்கம்
போருக்கு இன்னுமேன் சுணக்கம் - நந்
பொறுமைக்கு இவர்கள்தான் விளக்கம்.
ஈழத்தில் தாய்மார்கள் கலக்கம் - ஈழம்
இந்தாபிடி என்றோ அவர் முழக்கம்
ஈழத்தை நேசிக்கும் கூட்டம் - அதில்
இணைந்ததில் மனம் நொந்து உறங்குதல் தயக்கம்
பகைவர்கள் படைகண்டு நடுக்கம் - கோழர்
அடிதடி வழிப்பறி செய்திட விருப்பம்
களத்தினில் வீர தியாகங்கள் பெருக்கம் - கண்டு
கயவர்கள் நெஞ்சமோ வஞ்சத்தில் புழுக்கம்
தோழரின் விடுதலை வாழ்விற்கு வணக்கம் - ஆக
மொத்தத்தில் எட்டப்பன் வம்சத்தின் சுருக்கம்.

"ஜெய்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லச் சாகுது மனுசம்

செம்பரத்தம் பூ மறந்தோம்
செவ்விளநீர் நிறம் மறந்தோம்
சிறு குருந்சி மணம் மறந்தோம்
எத்தனையோ மறந்தோம் நினைத்ததெல்லாம்
நண்பா! ஆற்றல் மிகு உன் வீரத்தை
எங்களின் வாழ்வுக்கு அழைக்கும் உன் தியாகத்தை


எதிரிக்கு வியூகம் அமைக்கும்போது
நண்பர்களால் கொல்லப்பட்டியாம்
எதிரியின் சன்னங்கள் துளைந்திருந்தால்
பொறுத்திருப்பாள் உன் அம்மாள்
எப்படித்தான் துடித்தாளோ!
யாழ்ப்பாணத்து சுடுமணலே
அர்த்தமில்லா இக்குருதியால் நீ
குளிர்ந்தாயா? நீ குளிரமாட்டாய்.

மெல்லச் சாகுது மனுசம் அங்கு
வெல்லப்போவது யார் என்றாலும் என்ன
எதிரியும் வழக்காளியும் ஒன்றென்றால்
இந்த மன நிலை மக்களுக்கு வந்துவிட்டால்
துப்பாக்கிகளும் தத்துவங்களும்
பறணில்தான்.

— செல்வம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: ஈ.ழ விடுதலைப் பேரவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MURASU

MURASU : 4
OLI : 5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL



MURASU - 53

*ARROSANT DES BALLES*
*PAR L'HELICOPTERES*

*Les forces armées de Srilanka tuent les tamouls dans les régions du nord et de l'est en arrosant des balles d'helicoptères.*

*Le gouvernement declare la guerre contre la communauté tamoule en tirant d'helicoptères. Après avoir tué ces innocents, le gouvernement les qualifient comme terroristes.*

*Les arrosage des balles se faisaient à Trincomalee, Muthur, Batticoloa, Mandur, Mullaitivu, Mannar, Vavuniya, Myliddy et Kankesanthurai.*

*Plus que centaine de personnes ont perdu leur vie pendant les trois derniers mois.*

*Chaque fois le gouvernement annonçait que l'helicoptère est utilisé pendant opération contre le terrorisme.*

*Le gouvernement prend le maximum effort pour destabliser la communauté tamoule en les supprimant par masse.*

*Le genocide peut cesser seulement en liberant l'Eelam. Ainsi le régime fasciste de J.R.Jeyawadene sera effacée d'Eelam.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PLUSIEURS PERSONNES ABATTUS A JAFFNA

### 3 Retraités ont été tués au fort de Jaffna:

Le 15 février 1986 tôt dans la matinée à 5H30 des retraités attendaient en faisant le queue pour leur retraite devant un banc près d'un camp militaire de Fort de Jaffna. L'armée a ouvert le feu sur ces personnes, tuant net 3 personnes. Ils ouvrent le feu sur ces personnes âgées à sang froid.

Les personnes ci-dessous ont été tombées sous les balles de l'armée:

1) V.S.Arulappa - 75 ans - Ilavalai
2) Muthukrishnan Selladurai - 77 ans-Koyathodam, Jaffna
3) M.Elayathamby - 50 ans - de la ville de Jaffna

A cause de cet incident, tous ont évacué la place et le travaille de distribution de retraite est interrompu.

### 5 Morts; 17 Blessés: par des attaques hélicoptères:

Le 19 février '86, les forces de sécurité ont attaqués les villages Thavadi, Suthumalai, Urumpirai et Tellipalai dans la région de Jaffna avec 4 petit avions et des hélicoptères en tuant 5 personnes, blessant plus de 17 et endommageant plusieurs habitations.

Dans les 5 abattus, les 3 ci-dessous ont été identifiés:

1) Mayooran - 9 ans
2) Kesavan -11 ans
3) Arulappu -65 ans

POUR TOUTES LES CORROSPONDES:

L'EDITEUR,
TAMOUL MURASU,
CONSEIL DE LA LIBERATION D'EELAM,
10,RUE DES MARTYRS,
75009,PARIS
FRANCE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Photocopies d'un journal de Srilanka de différentes dates:

01.12.1985/07.12.1985/28.12.1985

Il est à croire que la fuite est une pretexte pour tuer ne decoule pas de bonne foi. Ce gendre de résumé extermination est une révision de la tuerie extra judiciaire comme en année 1983.

The Island

01.12.1985
Edition de l'après midi

En écahppant du camp d'internement de l'armée deux terroristes abattus

Deux terroristes qui ont essayé d'échapper d'un camp d'internement militaire du quartier général de l'armée de Colombo ont été abattus par les gardes en service dans la matinée d'hier.

Le deux terroristes font partie des leaders les plus durs, ont été capturés par les forces de sécurité à Jaffna durant une opération anti-terroriste qui ont été transferés à Colombo pour l'interrogatoire. Ils ont été arrêtés sous la loi de Prevention contre terrorisme, et detenus dans locale de garde de l'armée, quand a eu lieu la fuite, selon dire hier du major général Nalin Seneviratne.

Mayor général Seneviratne disait à "l'île" que l'alarme a été donné par les militaires en service, en ouvrant le feu sur les suspects tuant sur le coup.

Une brigade de police sur le commando de ASP S.Kombalavithana y compris les inspecteurs Noel Francis et Ranjith de Silva ont fait leur apparition sur place après l'incident. La police a identifié les deux corps des suspects terroristes, connus sous le nom de Kandapillai Thiagrajah et Jesunudeen.

Les corps ont été transférés a la morgus de la police.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Daily News 07.12.1985

## Evadés abattus

Dix terroristes suspects à Seruvila ont été abattus hier quand ils ont essayé de s'evader. Selon le ministre de Sécurité Nationale, une enquête générale était ouverte.

## Escapees shot dead

DAILY NEWS 7-12-85

Ten terrorist suspects held in Seruwila were shot dead yesterday when they attempted to escape. A magisterial inquiry was being held, the National Security Ministry said.

LATE CITY EDITION

THE ISLAND 1-12-1985

## While trying to escape from Army custody

# *Two hardcore terrorists shot dead*

**By Suresh Mohamed**

Two terrorist suspects who attempted to escape from Army custody at the Army Headquarters in Colombo were shot dead by sentries on duty during the early hours of yesterday.

The two suspects claimed to be hardcore terrorist leaders had been captured by security forces in Jaffna during an anti-terrorist operation sometime back and brought down to Colombo for interrogation. They were being detained under the Prevention of Terrorism Act (PTA) and had been inside an Army Guard Room when the bid to escape was made, Army Chief, Major General Nalin Seneviratne said yesterday.

Major General Seneviratne told "The Island" that the attempt to escape was foiled by alert Army sentries, who opened fire killing the two suspects on the spot.

A Police team headed by ASP S. Kombalavithana and comprising Inspectors Noel Francis and Ranjith de Silva were at the scene after the shooting. Police identified the two dead terrorist suspects as Kanthapillai Thiagrajah and Jeyasunudeen.

Their bodies have now been removed to the Police Morgue.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Island 01.12.1985

## 10 terroristes abattus en essayant d'échapper

10 durs terroristes qui prennent partie pour la liberté ont été abattus hier matin par les forces de sécurité dans un camp militaire de Seruvila dans la région de Trincomalee.

Selon les sources de la sécurité, ils ont été interrogés, quand ces detenus ont fait monuement de s'evader. Les forces de securité en service étaient obligées d'ouvrir le feu, evitant ainsi l'attaque de ceux-ci sur le camp.

THE ISLAND 1-12.85

## 10 terrorists shot dead trying to escape

By Norman Palihawadana

Ten hard — core terrorists who made a dash for freedom from an army camp in Seruwila in the Trincomalee District have been shot dead by the Security Forces, yesterday morning.

According to Security Sources the Security forces were questioning these terrorists who were arrested recently, when these detainees made a dash for arms and at the soldiers and attempted to make good their escape. The Security Forces on guard, the Security sources said, were compelled to open fire to prevent them from escaping and attacking them camp.

The Island 28.12.1985

## 2 terroristes abattus pendant la fuite

Les forces de sécurité ont abattu deux terroristes essayant de fuir d'un camp militaire de la région Est, declara la porte parole du ministre de la défense mercredi dernier.

Il disait que les terroristes abattus, tous deux appartenant à l'Eelam Organisation Revolutionnaire des Etudiants ont été parmi les 600 personnes arrêtées le dimanche pendant l'opération de recherche dans le département d'Amparai.

THE ISLAND - 28-12-1985

## 2 terrorists killed in escape bid

By Aloy Perera

Security Forces shot dead two terrorists trying to escape from a military camp in the Eastern Province a Defence Ministry spokesman said last Wednesday.

He said that the dead terrorists both members of the Eelam revolutionary organisation of students were among 600 people arrested on Sunday during search operations in Amparai District.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE PONT PRINCIPAL A JAFFNA (PANNAI) A ETE ENDOMMAGE

Le pont principal qui lie les îles Mandaitivu, Pungudutivu et Kayts a été endommagé le vendredi 14.02.1986 dans la nuit par les forces armées. Celui-ci est le seul pont qui lie les îles et la ville de Jaffna. Ce pont principal porte le nom de "Pont de Pannai". A cause d'explosion causée sur le pont, le transport des vivres était coupé. Les insulaires sont privés de nourritures.

Avant une sémaine de l'explosion, une manifestation massive a été organisée par les habitants de Velanai, Kayts en signe de protestation contre les 1000 m de rayon autours des camps militaires déclaré en tant que zône intérdite.

Le pont tombe dans le rayon de la zône intérdite et les forces de sécurité ont fait explosé le pont pour garder leur sécurité.

Le gouvernement essaye toujours à couper les liens entre les villages pour mieux supprimer les Tamouls.

## PLUS DE 40 JEUNES FILLES TAMOULES ONT ETE ARRETEES A MUTHUR

Dans la première sémaine du mois de février 1986, plus de 40 jeunes Tamouls ont été arrêtés à Muthur dans le département de Trincomalee.

Le 7 février 1986 une jeune fille Tamoule âgée de 22 ans a été arrêtée par les forces armées et elle a dû subir des tortures. A l'heure actuelle, elle a été conduite à un hôpital à Muthur pour subir des traitements médicaux.

La plus part des détenues sont agées entre 18 et 25 ans. Les mères des détenues se plaignent auprès du comité du peuple de Trincomalee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 000 TAMOULS REFOULES A CAUSE DE LA DECLARATION DES ZONES INTERDITES

A cause de la déclaration des zônes interdites autours des camps militaires dans les régions du nord, à peu près 110 000 tamouls ont été refoulés. Il y a 11 camps militaires dans le nord et le gouvernement à décreté zônes interdites d'un rayon de 1000 m des camps.

La population du nord ont exprimé leur indigne et demande au gouvernement d'éliminer les zônes interdites.

Le tableau suivant montre en detail des places interdites et les personnes renfoulées.

| Place des camps | Nombre de personnes | Nbr. de personnes refoulées par la déclaration de la zône interdite |
|---|---|---|
| 1) Jaffna | 125 000 | 52 000 |
| 2) Kankesanthurai | 14 500 | 6 500 |
| 3) Palaly | 8 600 | 2 400 |
| 4) Myliddy | 8 200 | 5 000 |
| 5) Valvedditthurai | 11 000 | 9 000 |
| 6) Point Pedro | 17 500 | 9 500 |
| 7) Thondamanaru | 5 300 | 2 700 |
| 8) Navatkuli | 7 600 | 1 800 |
| 9) Elephant Pass | 1 300 | 600 |
| 10 Karainagar | 13 000 | 8 000 |
| 11 Nainativu | 6 700 | 3 500 |

Totale des personnes refoulées = 101 000

PUBLIE PAR

CONSEIL DE LA LIBERATION D'EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org